# வேத பாரதி
## செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL Tamil Monthly தமிழ் மாத இதழ்

மலர் : 7 இதழ்:10 ஜுலை: 2023 ரூ.20/-
Volume: 7 Issue: 10 July : 2023 Rs.20/-



**SHRI MAHA MERU MANDALI TRUST**

Reg. No.DIT (E) No.2 (651) 12-13/Sl.No.90/13-14



# அஷ்டோத்ர ஸத சுக்ர வார ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணம்

**44வது பாராயணம் - 09.06.2023 வெள்ளிக்கிழமை**

**அருள்மிகு கருமாரி திரிபுரசுந்தரி அம்மன் திருக்கோவில்**

அசோக் நகர், சென்னை - 83.

**45வது பாராயணம் - 16.06.2023 வெள்ளிக்கிழமை**

**அருள்மிகு சுந்தரவிநாயகர் கோவில்**

தண்டீஸ்வரம் நகர், வேளச்சேரி, சென்னை - 42.

**46வது பாராயணம் - 23.06.2023 வெள்ளிக்கிழமை**

**ஸ்ரீ அழியாபதீஸ்வரர் கோவில்**

கருப்பந்துறை, திருநெல்வேலி.

**ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் பள்ளி,** திருநெல்வேலி,

**அருள்மிகு ஸ்ரீ நெல்லையப்பர் திருக்கோவில்,** திருநெல்வேலி.

**ஸ்ரீ குற்றாலநாதர் திருக்கோவில்,** திருக்குற்றாலம்.

**ஸ்ரீ காசிவிஸ்வநாதர் கோவில்,** தென்காசி.

**47வது பாராயணம் - 30.06.2023 வெள்ளிக்கிழமை**

**அருள்மிகு வரசித்தி விநாயகர் திருக்கோவில்**

ஸ்ரீ நகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.

---

தங்கள் வீடுகளுக்கு அருகில் உள்ள ஆலயங்களில் வெள்ளிக்கிழமைகளில் மண்டலி சார்பாக ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் செய்திட அனுக வேண்டிய எண்.

**9443495950, 9444060346**

# வேதபாரதி
## செய்திகள்



**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

## வேதமந்திரம் - 47

**ப்$^3$ரஹ்ம பூ$^1$தா$^1$ பு$^1$நாது$^1$ மாம்/ யத$^3$ச்சி$^2$ஷ்டம்**
**ஆபோ$^4$ஜ்யம் யத்$^3$வாது$^3$ச்ச$^1$ரித$^1$ம் மம/ ஸர்வம் பு$^1$நந்து$^1$**
**மாமாபோ$^1$ஸதா$^1$ஞ் ச$^1$ ப்$^1$ரதி$^1$க்$^3$ரஹம் ஸ்வாஹா//**

**- தைத்தரீய ஆரண்யகம்.**

**பொருள் :** *என்றும் புனிதமாயுள்ள வேதம் (ப்ரஹ்ம) என்னை புனிதமாக்கட்டும்; பிறர் உண்ட மிச்சமும் புசிக்கத் தகாததுமான எது என்னால் புசிக்கப்பட்டதோ என்னுடைய எந்த துர்நடத்தை உண்டோ கெட்டவர்களிடமிருந்து ஏற்றுக்கொண்டது எது உண்டோ அவை எல்லாவற்றினின்றும் என்னை ஜலதேவதை புனிதமாக்கட்டும் என்று ப்ரார்த்தித்து புனிதமான என்னைப் பரமாத்மா ஜோதியில் ஹோமம் செய்கின்றேன்.*

*|| ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: |*

# வேதபாரதி செய்திகள்

**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 7 இதழ்: 10

*அச்சிட்டு வெளியிடுபவர்*
*பதிப்பாளர், ஆசிரியர்*

**ஆர்.வெங்கட்ராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

*அச்சகம்*
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
*39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,*
*சென்னை - 600 010.*

REGD No : TN/CC(S) / DN / 571 / 21-23

RNI No : 1282188

Title Code : TNTAM/2016/73726

R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**

(Tamil Monthly Magazine)

Published on : 1-7th (1st Week) Every Month

TN/PM G (CCR) / WPP 605/21-23 /
Valid from 01.01.2021 to 31.12.2023

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்**
*நெ.17, பாரதிதெரு, இந்திராநகர்,*
*காமராஜபுரம், வேளச்சேரி,*
*செ - 42. போன்: 9025864231*


## புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| ஒரு நிமிடம் உங்களோடு... | 5 |
| ஆடி மாத விசேஷங்கள் | 7 |
| அட்டைப்பட விளக்கம் | 8 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 12 |
| ஸ்ரீமத் பாகவதம் | 15 |
| ஆதிசங்கரர் | 18 |
| அறுபத்தி மூன்று நாயன்மார்கள் | 21 |
| முதுரை (ஔவையார்) | 24 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 31 |
| மஹாபெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 32 |
| ஆசான் | 33 |
| இராமாயணம் தரும் படிப்பினை | 35 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 39 |
| சாதனைப்பறவைகள் | 43 |
| அறிவோம் ஆழ்மனதின் | 47 |
| தருவின் நிழலில் | 48 |
| அட்ட வீரட்டத் தலங்கள் | 52 |



**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.200 |
| 10 வருட சந்தா | ரூ.1500 |

வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட

**VEDABHARATHI**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.

**D. சூரியநாராயணன்**
**Cell : 98841 05302**
**R. வெங்கட்ராமன்**
**Cell : 94434 95950**

Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

# ஒரு நிமிடம் உங்களோடு!

## 59. காரணமின்றி எதுவும் நடக்காது

அவர் ஒரு பெரிய பணக்காரர். அவர் தன்னுடைய பெரிய பங்களாவில் ஏராளமான மாடுகளையும், ஆடுகளையும், நாய்களையும், கோழிகளையும் வளர்த்துவந்தார். அவைகளுக்காக பெரிய தொழுவம் கட்டியிருந்தார். அந்த தொழுவத்தில் அவைகள் மிகவும் சந்தோஷமாக இருந்தன.

அதே பங்களாவில் ஒரு மரத்தடியில் ஒரு சிறிய பொந்தில் ஒரு குட்டி எலி தன் தாயுடன் வசித்துவந்தது. ஒரு நாள் அந்த சுண்டெலி வெளியே வந்தபோது அந்த பங்களாவில் இருக்கும் ஆடு, மாடுகள் மிகவும் சந்தோஷமாக இருப்பதைப் பார்த்தது. அது தன் தாய் எலியிடம் போய் “அம்மா அந்த மிருகங்கள் எல்லாம் எவ்வளவு பெரிய பங்களாவில் வசிக்கின்றன. நமக்கு மட்டும் ஏன் அம்மா இவ்வளவு சிறிய வீடு? நமக்கும் பெரிய வீடு இருந்தால் நாமும் அவைபோல் சந்தோஷமாக இருக்கலாம் அல்லவா?'' என்று வருத்தத்துடன் கேட்டது. அதற்கு தாய் எலி அமைதியாக தன் குட்டி எலியிடம் “இதற்கான காரணத்தை நீயே விரைவில் தெரிந்து கொள்வாய்'' என்றது.

சில நாட்கள் கழித்து ஒரு நாள் அந்த சுண்டெலி வெளியில் சுற்றி திரியும்போது அந்த வழியே வந்த ஒரு பூனை அந்த சுண்டெலியை துரத்த ஆரம்பித்தது. அந்த சுண்டெலி அந்த பங்களாவில் பல இடங்களுக்கு ஓடியது. அப்போதும் அந்த பூனை விடா பிடியாக அதை

துரத்தியது. கடைசியாக அந்த சுண்டெலி தன்னுடைய சிறிய வீட்டிற்குள் (பொந்தில்) நுழைந்தது. பூனையால் உள்ளே நுழைய முடியாமல் ஏமாந்து திரும்பி சென்றது. அப்போது அந்த அம்மா எலி தன் குட்டியிடம் "இப்போது இந்த நம்முடைய சிறிய வீட்டின் அருமை புரிகிறதா? இந்த சிறிய வீடு இல்லையென்றால் இன்று நீ உயிரோடு இருந்திருக்கமாட்டாய். எதையும் அருமை புரியாமல் ஏளனமாக பார்க்கக்கூடாது" என்று தன் குட்டி எலிக்கு புரியவைத்தது. இதை உணர்ந்த அந்த சுண்டெலியும் தன் ஆசைகளை குறைத்து அந்த சிறிய வீட்டிலேயே சந்தோஷமாக வாழ்ந்தது.

இப்படித்தான் நாமும் இருக்கிற இடத்தில் இருக்கும் சிறப்புக்களை அறியாமல் எதை எதையோ தேடுகிறோம். அவை கிடைக்கவில்லையானால் கடவுளை குறைகூறுகிறோம்.

எனவே எதையும் ஏற்றுக்கொண்டு, இருப்பதை வைத்துக்கொண்டு சிறப்போடு வாழ கற்றுக்கொள்ள வேண்டும். நாம் இப்போது என்ன நிலையில் இருக்கிறோமோ அதுவே சிறந்த ஒன்றுதான் என்பதை உணர வேண்டும்.

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**

## 17.07.2023 திங்கட்கிழமை - அமாவாஸை

சோபக்ருது நாம ஸம்வத்ஸரே உத்தராயணே க்ரிஷ்மருதௌ, கடக மாஸே, க்ருஷ்ணபக்ஷே, அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ வாஸர: வாஸரஸ்து இந்து வாஸர யுக்தாயாம் புனர்வஸு நக்ஷத்ர யுக்தாயாம், விஷ்ணு யோக விஷ்ணுகரண, ஏவம்குண ஸகல விசேஷண விஸிஷ்டாயாம், அஸ்யாம், அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ.

## சோபக்ருது வருஷம் - ஆடி மாத விசேஷங்கள்
## (ஜுலை 17.07.2023 முதல் ஆகஸ்ட் 17.08.2023 வரை)

| | | | |
|---|---|---|---|
| *14.07.2023* | ஆனி *29* | வெள்ளி | பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் ஆராதனை |
| *17.07.2023* | ஆடி *1* | திங்கள் | அமாவாஸை, ஆடிப்பண்டிகை |
| *21.07.2023* | ஆடி *5* | வெள்ளி | சதுர்த்தி விரதம் |
| *22.07.2023* | ஆடி *6* | சனி | ஆடிப்பூரம் |
| *23.07.2023* | ஆடி *7* | ஞாயிறு | சஷ்டி விரதம் |
| *28.07.2023* | ஆடி *12* | வெள்ளி | அனுஷம் |
| *29.07.2023* | ஆடி *13* | சனி | ஏகாதசி |
| *30.07.2023* | ஆடி *14* | ஞாயிறு | ப்ரதோஷம் |
| *01.08.2023* | ஆடி *16* | செவ்வாய் | பௌர்ணமி |
| *03.08.2023* | ஆடி *18* | வியாழன் | ஆடிப்பெருக்கு பூஜ்ய ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் ஜயந்தி |
| *04.08.2023* | ஆடி *19* | வெள்ளி | சங்கடஹர சதுர்த்தி |
| *07.08.2023* | ஆடி *22* | திங்கள் | ஷஷ்டி விரதம் |
| *09.08.2023* | ஆடி *24* | புதன் | ஆடிக்கிருத்திகை |
| *12.08.2023* | ஆடி *27* | சனி | ஏகாதசி |
| *13.08.2023* | ஆடி *28* | ஞாயிறு | ப்ரதோஷம் |
| *16.08.2023* | ஆடி *31* | புதன் | ஆடி அமாவாஸை |

### 16.08.2023 புதன்கிழமை - அமாவாஸை

சோபக்ருது நாம ஸம்வத்ஸரே, தக்ஷிணாயனே க்ரிஷ்ம ருதௌ, கடக மாஸே, க்ருஷ்ணபக்ஷே, அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ வாஸர: வாஸரஸ்து ஸௌம்ய வாஸர யுக்தாயாம் ஆஸ்லேஷா நக்ஷத்ர யுக்தாயாம், விஷ்ணு யோக விஷ்ணுகரண, ஏவம்குண ஸகல விசேஷண விஸிஷ்டாயாம், அஸ்யாம், அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ.

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042.
Editor : **R. VENKATARAMAN, 9443495950**

## அட்டைப்பட விளக்கம்
## பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் ஆராதனை
## ஆனி 29, 14.07.2023 வெள்ளிக்கிழமை, துவாதசி திதி

*பூர்வாச்ரமத்தில் பெற்றோர் வைத்த பெயர் சங்கரன். அதற்கு ஏற்றாற்போல் படித்துப் பேராசிரியராகி தலைசிறந்த ஸ்தாபனமான ஐஐடி சென்னையில் பௌதீகத் துறையில் ஆசிரியராக பணியாற்றினார்.*

*ஒரு கால கட்டத்தில் எல்லாவற்றையும் துறந்து அத்வைத ஸித்தாந்த பாரம்பரியத்தில், ஆதி சங்கரரால் ஸ்தாபிக்கப்பட்ட சிருங்கேரி சங்கர மடத்தில் 1986-ஆம் ஆண்டு பூஜ்ய ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த ஸ்வாமிகளிடம் ஸந்யாஸ தீக்ஷை பெற்றார்.*

*ஸ்ரீ ஸ்வாமிஜி எந்த மடத்தையும் சாராமல் தனக்காக ஒரு மடமோ சிஷ்ய பரம்பரையையோ வைத்துக் கொள்ளாமல் தனியே இயங்கிவந்தார். இவருடைய வழிகாட்டுதலால் நாடெங்கிலும் பல்வேறு ஆன்மிக மாநாடுகள். வேதாந்த முகாம்கள், யக்ஞங்கள் நடந்துள்ளன. அவற்றுள் சில*

1. *1990 ஆம் ஆண்டு ரஷ்ய அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று ரஷ்யா சென்றஸ்வாமிகள் அங்கு கிரெம்லின் கட்டிடத்தில் வேத வாக்கியங்கள் சிலவற்றை சொல்லி அதன் அர்த்தத்தை விளக்கினார்.*
2. *1995 ஆம் ஆண்டு 1000 பிரம்மச்சாரிகளைக் கொண்ட* **“காயத்ரீ ஜப யக்ஞம்”** *நடத்தினார்.*
3. *2006 ஆம் ஆண்டு பெங்களூருவில் 10,000 பேர் கலந்துகொண்ட “ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம ஜப யக்ஞம்” நடத்தினார்.*

*ஸ்வாமிஜிகளின் வழிகாட்டுதல்படி அவருடைய தலைமையின் கீழ்* **“வேதபாரதி”** *அமைப்பு நடத்திய பெரிய நிகழ்ச்சிகள்.*

*09.02.2014 ஞாயிற்றுக்கிழமை :*

*சென்னை, ஊரப்பாக்கம், ஸ்ரீசங்கர வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில், 1000 பேர் கலந்துகொண்ட* **“ஏக தின அதிருத்ர மஹா யக்ஞம்”**

*01.02.2015 அன்று சென்னை கிழக்கு தாம்பரம் ஜெய்கோபால் கரோடியா நேஷனல் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ஏறத்தாழ 3000 (பெண்களும் ஆண்களும்) ஆன்மீக அன்பர்கள் கலந்துகொண்ட* **“ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம ஜப யக்ஞம்”.**

*23.04.2017 ஞாயிறு அன்று* **1500 பேர் கலந்துகொண்ட “கோடி காயத்ரீ ஜப யக்ஞம்”**

*2017 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பிரச்சனைகள் நிறைந்த ஜம்மு-காஷ்மீரில் சைவம் மற்றும் வேதாந்தத்தின் ஒற்றுமை பற்றிய மாநாடு ஒன்றில் உரையாற்றி வேதாந்த - சைவக் கோட்பாடுகளின் ஒற்றுமையை விளக்கினார். இந்த மாநாடு மிக அமைதியாகவும், வெற்றிகரமாகவும் நடைபெற்றது.*

*ஸ்வாமிஜி தன் ஆன்மீகக் கருத்துகளை ஒரு புத்தகமாக இயற்ற விழைந்தார். அவர் பெங்களூருவில் தங்கியிருந்தபோது கடலூர் என். ஆர்.சத்தியமூர்த்தி என்பவரை வரவழைத்து தான் சொல்ல சத்தியமூர்த்தி அவர்கள் அதை அப்படியே எழுதிவந்தார். அந்த நூல்* ”Foundation of Dharma” *என்ற பெயரில் ஆங்கிலத்திலும் மற்றும் ஆறு மொழிகளிலும் 2006-ல் வெளிவந்தது. அதே புத்தகம் 2008-ல் பூஜ்யஸ்ரீ ஓங்காரநந்தா அவர்களின் அருளாசியுடன் தமிழில்* **“தர்மத்தின் குரல்”** *என்ற பெயரில் வெளிவந்தது.*

*இன்றைய தலைமுறையினர் புரிந்து கொள்வதற்கு ஹேதுவாக லௌகிக யுக்திகள் மற்றும் சாஸ்த்ர யுக்திகளை எளிமையான முறையில் அழகாக தொகுத்து ஸ்வாமிஜி அவர்கள்* **“வேதாந்த ப்ரபோதம்”** *என்ற நூலை இயற்றினார். இந்த நூல் ஆங்கிலம்,*

ஸம்ஸ்க்ருதம், கன்னடம், ஹிந்தி, தெலுங்கு, மலையாளம், குஜராத்தி ஆகிய மொழிகளில் வெளிவந்தது. இந்த புத்தகத்தை ஸ்வாமிஜி தேர்ந்தெடுத்த மஹாமஹோபாத்யாய மணிதிரவிட் ஸாஸ்திரிகள் தமிழில் மொழி பெயர்த்தார்கள்.

புத்தகத்தை வேதபாரதியும் சென்னை கிரி டிரேடிங்கும் இணைந்து 18.07.2018-ல் மைலாப்பூர் சம்ஸ்கிருத கல்லூரியில் வெளியிட்டது.

புத்தகத்தை தற்போதைய மணிப்பூர் ஆளுனர் திரு. இல கணேசன் அவர்கள் வெளியிட முதல் பிரதியை மைலாப்பூர் மஹாமஹோபாத்யாய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஸாஸ்திரிகள் பெற்றுக்கொண்டார்கள். இந்த புத்தகம் அத்வைத சித்தாந்தத்தின் ஒரு திருப்புமுனை என்றே கூறலாம்.

ஸ்வாமிஜி மிக மிக எளிமையாக வாழ்ந்தார். தன் காஷாயத்தை தானே துவைத்து உடுத்துவார். பிக்ஷா-மதிய உணவு மட்டுமே உட்கொள்வார். பணத்தை கையால் தொடாதவர்.

வேதபாரதியின் ஆன்மீக குருவாகவும், வழிகாட்டியாகவும் இருந்த பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் 28.07.2019 – ஞாயிற்றுக்கிழமை பகல் 1.00 மணிக்கு முக்தி அடைந்தார். அவர் தம்முடைய இறுதி மூச்சுவரை அறநெறிகளைக் கடைபிடித்து **ஸ்திதப்ரஜ்ஞனாக** வாழ்ந்தார்.

உடல் அழிக்கப்படும் போதும் ஆவி அழிக்கப்படுவதில்லை. அவருடைய ஆன்மா நம்மை வழிநடத்தும் அருட்குருநாதரின் திருவடிகளைப் போற்றி வணங்குவோம்.

ஸ்வாமிஜி அவர்கள் நான்கு முக்கிய தலைப்புகளில் தர்மத்தின் குரல் புத்தகத்தை எழுதியுள்ளார்கள்.

1. கடவுள் (41 பக்கங்கள்) 2. மறுபிறப்பு (52 பக்கங்கள்)
3. வேதங்கள் (28 பக்கங்கள்) 4. "நிறைவுரை" என்ற

தலைப்பில் (24 பக்கங்கள்)

பக்கம் 143-ல் "மகளிர் தர்மம்" என்ற தலைப்பில் பெண்களின் தர்மம் குறித்து அழகாக விளக்குகிறார்.

பக்கம் 148-ல்

1. தோல்வி மனப்பான்மையை விட்டொழி
2. ஆணவத்தை அழித்தொழி
3. குருட்டு நம்பிக்கையைக் கைவிடு
4. வறட்டு வாதத்தை விட்டுவிடு
5. அடிமைத்தனத்தை அகற்றிவிடு
6. கீழ்ப்படியாமையை களைந்துவிடு
7. ஆன்மீக முன்னேற்றத்திற்கு தூய்மையான சூழ்நிலை அவசியம் என்பதை நினைவுகொள்.
8. சாத்திரக் கோட்பாடுகளை உன் முழு ஆற்றலைப் பயன்படுத்தி கடைப்பிடி
9. நமக்கு ஊக்கமளித்து, வழிநடத்தி, நம்மையெல்லாம் ஆசீர்வதித்த பகவாந் வாஸுதேவனை பிரார்த்திப்போம் என்கிறார்.

ஸ்வாமிஜியின் இந்த அறிவுரைகளை நாமும் நம் வாழ்க்கையில் கடைபிடித்து வாழ்வோம்.

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**


உ

ஸ்ரீ குருப்யோ நம:

# வேதபாரதி

ஸ்வாமிகளின் பொற்பாதங்களை வணங்கி

**பூஜ்ய ஸ்ரீ பரமானந்தபாரதி ஸ்வாமிகள்**
**3ம் ஆண்டு ஆராதனை**

**இடம் : ஸ்ரீ சங்கர குருகுலம்**

CP ராமசாமி தெரு, மந்தைவெளி,

**நாள் : 14.07.2023 வெள்ளிக்கிழமை**

**தொடர்பு :**

**9790920672 / 9840201625**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

D. சூரியநாராயணன் பகுதி - 51

## அத்தியாயம் — 3

## கர்ம யோகம்

இந்த இதழ் முதல் ஸ்ரீமத் பகவத் கீதையின் மூன்றாம் அத்தியாயம் ஆரம்பம் ஆகிறது.

ஸ்ரீமத் பகவத் கீதையில் இந்த மூன்றாம் அத்தியாயத்திற்கு **"கர்ம யோகம்"** என்று (தலைப்பு) பெயர் இடப்பட்டுள்ளது. கீதையில் மிகவும் முக்கியமான அத்தியாயம் இந்த **"கர்ம யோகம்"**. இந்த அத்தியாயம் மொத்தம் 43 ஸ்லோகங்களைக் கொண்டது.

அறிவின் மூலம் அடையும் ஞானத்தைவிட செயல் (கர்மத்தின்) மூலம் அடையும் ஞானமே சிறந்தது என்பதை இந்த அத்தியாயம் உணர்த்துகிறது. பொதுவாக நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் "கர்மம்" என்று சொல்லுவோம். இது என்னுடைய "சுதர்மம்" அல்லது "ப்ராரப்தம்" என்று சொல்லுவோம். தினசரி நாம் செய்யும் காரியங்களை எப்படி செய்தால் நம்முடைய வாழ்க்கை முன்னேற்றம் அடையும், ஒரு mental transformation உண்டாகும் என்று நமக்கு சொல்லுவதற்காக வேதவியாஸ மஹரிஷி இந்த கர்மயோகத்தை நமக்கு சொல்லியிருக்கிறார்.

இந்த மூன்றாவது அத்தியாயத்தின் உள்ளே நுழையும் முன் நாம் இரண்டாவது அத்தியாயத்தை ஒரு மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

அர்ஜுனன் யுத்தம் செய்ய யுத்த களத்திற்கு

வருகிறான். வந்ததும் அவனுக்கு “நான் எந்த காரியத்திற்காக இந்த யுத்த களத்திற்கு வந்தேனோ அதை என்னால் செய்ய முடியும்” என்று நினைக்கிறான். ஆனால் யுத்தம் செய்யும்படி கூறியதும் அவனால் முன்னே போக முடியவில்லை. காரணம் அவனுடைய மனதில் பல சந்தேகங்களும், பல பயங்கரமான எண்ணங்களும் தோன்றின. பல துக்ககரமான எண்ணங்களும் ஏற்பட்டன. அதனால் அவன் யுத்தம் செய்வதை நிறுத்திவிட்டான். அந்த நேரத்தில் தான் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் வருகிறார்.

அவரைப் பார்த்ததும் அர்ஜுனன் “கிருஷ்ணா நான் யுத்தம் செய்யப்போவதில்லை. இவர்களுடன் யுத்தம் செய்வதால் நான் அதன் கர்மபலத்திலிருந்து தப்பமுடியாது. இவர்களை யுத்தத்தில் வீழத்தினால் எனக்கு ஏற்படும் தனிமையை என்னால் ஏற்க இயலாது. தன் குருவை கொன்ற பாவி என்று ஊர் மக்கள் என்னை அவமதிப்பார்கள். ஆகையால் நான் யுத்தத்திலிருந்து விலகுகிறேன் என்றான்.

அப்போது பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனிடம் அர்ஜுனா நீ நினைப்பது சரியல்ல. நீ வருந்துவதற்கு காரணம் நீ நினைப்பதுபோல் உன்னுடைய உறவினர்கள் அல்ல, உன்னுடைய பலவீனமான மனதுதான். உன்னிடம் இந்த பலவீனமான மனது உள்ளதுபோல் உறுதியான மனதும் உள்ளது. அதனால் **“க்ஷுத்ரம் ஹ்ருதய தௌர்பல்யம் த்யக்த உத்திஷ்ட பரந்தப” (கீ 2-3)** இழிவான உள்ளத் தளர்ச்சியை துறந்துவிட்டு எழுந்திரு. உன்னுடைய பலவீனமான மனதை விட்டு உன்னுடைய உறுதியான மனதுடன் எழுந்திரு” என்கிறார். அப்போது அர்ஜுனன்

“கிருஷ்ணா நான் என்ன செய்ய வேண்டும்? என்று கூறுவாயாக” என்கிறான்.

அதன்பிறகு பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனுக்கு அறிவுரைகள் கூறஆரம்பிக்கிறார். முதலில் “ஸாங்கிய யோகம்” (இரண்டாம் அத்தியாயம்) பற்றி கூறுகிறார். இதில் “தேஹம்” மற்றும் “தேஹீ” யைப் பற்றி கூறி **“ஸுகதுக்கே ஸமே க்ருத்வா லாபாலாபௌ ஜயாஜயௌ... (கீ 2-38)** இன்ப துன்பம், “லாப நஷ்டம்”, “வெற்றி தோல்வி” ஆகியவைகளைச் சமமாகக் கருதிப் போரில் முனைக. அதனால் நீ பாபம் அடையமாட்டாய்” என்கிறார்.

உடனே அர்ஜுனன் பகவானிடம் அப்படிப்பட்ட உறுதியான மனதுடன் யாராவது இருந்துள்ளார்களா? என்று கேட்க, பகவான் ஸ்திதப்பிரக்ஞனைப் பற்றி கூறுகிறார். அதன் பின் அர்ஜுனன் கேட்க ஆரம்பிக்கும் கேள்விகள் மூன்றாவது அத்தியாயத்தில் ஆரம்பமாகின்றன.

கர்மயோகம் தொடரும்...

## வேதபாரதி ஊரப்பாக்கம்

வேதபாரதி ஊரப்பாக்கம் கிளையின் சார்பாக ஒவ்வொரு வாரம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 7.30 மணி அளவில் லோக க்ஷேமத்திற்காக சகஸ்ர காயத்ரீ ஜபம் மற்றும் சமிதா தானம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு முதல் வாரம் நிகழ்ச்சியாக கடந்த ஞாயிறு 02.06.2023 அன்று ஊரப்பாக்கம் வர்த்தமான் நகர், பச்சைநிறசாய்பாபா தியான மையத்தில் நடைபெற்றது. இதில் பிரம்மச்சாரி குழந்தைகள் உட்பட 15 நபர்கள் கலந்து கொண்டனர். இச்ஜெப யக்ஞம் ஆனது ஒவ்வொரு வாரமும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

-பொறுப்பாளர் ஸ்ரீ சந்திரசேகர்.

# ஸ்ரீமத் பாகவதம்

*(ஸத்யம் பரம் தீமஹி)*

பரிதி

பகுதி - 30

## ஸ்கந்தம் 3

## கபில பகவான் அவதாரம். (ஸ்கந்தம் 3 = அத்தியாயம் 31 – ஸ்லோகங்கள் 1 முதல் 11 வரை, 22 முதல் 26 வரை)

*கபில பகவான் தன் தாய் தேவஹூதிக்கு பக்தி யோகத்தைப் பற்றி விளக்கி கூறியபின் மரண சமயத்தில் ஒரு ஜீவனுக்கு எவ்வளவு கஷ்டம் ஏற்படுகிறதோ அதற்கு மேற்பட்ட கஷ்டங்கள் கர்பத்திலிருந்த போதும் ஏற்படுகிறது என்று மிக கம்பீரமாக விளக்குகிறார்.*

*சுமார் 5000 வருடங்களுக்கு முன்பாக எழுதப்பட்டதாக கருதப்படும் ஸ்ரீமத் பாகவதத்தில், எந்தவிதமான விஞ்ஞான அறிவும் இல்லா அந்த காலத்தில் ஒரு பெண்ணின் கர்ப்பப்பையில் கரு எப்படி உண்டாகிறது. எப்படி வளர்ச்சி அடைகிறது என்று விவரிக்கப்பட்டுள்ளது. அவற்றைஇன்றைய உயிரியல் விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகளுடன் ஒப்பிடும்போது 100 சதவீதம் ஒத்துப்போகிறது.*

**கர்மணா தைவநேத்ரேண ஜந்துர் தேஹோபபத்தயே/**
**ஸ்த்ரியா : ப்ரவிஷ்ட உதரம் பும்ஸோ ரேத : கணாஸ்ரய ://**
**(பாக 3-31-1)**

**பொருள் :** *ஜந்துவானது ஈஸ்வரனுடைய பார்வையால், பூர்வ ஜன்ம கர்மத்தினால் உந்தப்பட்டு ஜீவன் உடலை எடுக்கும் பொருட்டு புருஷனின் வீர்யத்தில் ஒட்டிக்கொண்டு ஸ்திரீயின் கர்பப்பையில் பிரவேசிக்கிறான்.*

**"ஜந்து" = "ஜாயதே இதி ஜந்துஹு : உலகில் ஜனிக்கும் எல்லாமே ஜந்துக்கள்தான். நாம் எல்லோருமே ஜந்துக்கள்தான்.**

*அப்படி கர்பப்பையில் பிரவேசிக்கும் அந்த ஜந்து,*

*முதல் இரவில் சுக்ரயோனியில் கலக்கிறான். ஐந்து இரவுகள் சென்றபின் வட்டமான நுரை போன்றவடிவமுள்ளதாக மாறுகிறான். பத்து நாட்களில் இலந்தைப் பழ வடிவமும், அதன் பின் மாமிச பிண்டமாகி ஒரு பல்லியின் ரூபத்தையோ அல்லது தலைகீழாக இருக்கும் ஒரு முதலையின் ரூபத்தை அடைவான் (பா 3-31-2)*

*ஒரு மாதம் ஆனவுடன் தலையும், இரண்டு மாதத்தில் கை கால் முதலிய அங்கங்களின் தோற்றமும் தோன்றுகின்றன. மூன்று மாதத்தில் நகம், ரோமம், தோல், எலும்பு முதலியவைகளின் அடையாளங்கள் தோன்றுகின்றன. சிசு ஆணா அல்லது பெண்ணா என்பது இந்த மாதத்தில் நிச்சயிக்கப்படுகிறது. ஆண்குறி, பெண்குறி, காது, மூக்கு த்வாரங்கள் உண்டாகின்றன. (பா 3-31-3)*

*நான்காவது மாதத்தில் தோல், ரத்தம், மாம்சம், மேதஸ், எலும்பு, மஜ்ஜை, சுக்லம் என்றஸப்த (ஏழு) தாதுக்களும், ஐந்தாவது மாதத்தில் பசி, தாஹங்களின் உற்பத்தியும் உண்டாகிறது. ஆறாவது மாதம் கர்ப்ப பையினால் சுற்றப்பட்டு வலது வயிற்றில் தலைகீழாக திரும்புவான். தாய் உட்கொள்ளும் அன்னம், பானம் முதலியவைகளால் தாதுக்கள் விருத்தியடைந்து புழுக்கள் உற்பத்தியாகி அதனால் தனக்குப் பிடிக்காததுமான மல மூத்திரங்களுடைய குழியில் அந்த ஐந்து படுத்திருக்கிறான். அங்குள்ள பசியுள்ள புழுக்களால் ஒவ்வொரு க்ஷணத்திலும் மிக மிருதுவாக இருப்பதால் கடிக்கப்பட்ட எல்லா அங்கங்களுமுடையதாய் அதனால் மிக்க கஷ்டங்களையுடையதாய் அடிக்கடி மூர்ச்சையடைகிறது. தாயால் உட்கொள்ளப்படும் மிளகாய், கடுகு உஷ்ணம், உப்பு, உவர்ப்பு, புளிப்பு இவைகளால் பீடிக்கப்பட்டவனாய் எல்லா அவயங்களிலும் உண்டான வேதனையால் கர்ப்பபையால் மூடப்பட்டவனாய் குடல்*

*மாலைகளாலும் வெளியில் சூழப்பட்டவனாய் வளைந்து முதுகையும், கழுத்தையும் உடையவனாய் வயிற்றில் தலையை வைத்துக்கொண்டு அங்கு இருக்கிறான். கூட்டில் அடைக்கப்பட்ட பறவைபோல் தனது அவயங்களை அசைக்க முடியாமல் இருக்கிறான். அப்போது அவனுக்கு பூர்வ ஜன்ம கர்மவசத்தால் அடையப்பட்ட நினைவையுடையவனாய் அனேக ஜன்மங்களிலுண்டான கர்மாவை நினைத்து நெடுமூச்சு விட முடியாமல் இருக்கிறான். (பா 3-31-4 மு 9 வரை)*

*ஒரு பெண்ணிற்கு ஆறாவது மாதம் மிக மிக முக்கியமான மாதம். இந்த மாதத்தில் தாயுடைய மனோவிஹாரங்கள் வயிற்றில் உள்ள குழந்தையால் அறிய முடியும். இந்த மாதத்தில் தாய் மற்றவர்களுடன் எப்படி பழகுகிறாளோ அதேபோல் நிலை அந்த குழந்தைக்கும் உண்டாகும். தாய் மிகவும் கவலையாகவும், டென்ஷனாகவும் இருந்தால் அது அந்த குழந்தையையும் பாதிக்கும்.*

*ஆறாவது மாதம்தான்* **“பிரஹலாதன்”** *தன் தாய் லீலாவதியின் வயிற்றில் இருக்கும்போது ஸ்ரீமத் பாகவதம் கேட்டான். ஆறாவது மாதம்தான்* **“அபிமன்யு”** *தன் தாய் சுபத்திரையின் வயிற்றில் இருக்கும்போது பகவான் ஸ்ரீ கிருஷ்ணனிடமிருந்து போர் வியூகங்களைக் கற்று அறிந்தான்.*

*ஆறாவது மாதம் முதல் கருவில் இருக்கும் குழந்தை தாயின் உணர்வுகளை புரிந்துகொள்ளும் என்பதால் தாய் தன் மனதை எப்போதும் மகிழ்ச்சியோடு வைத்திருக்க வேண்டும். மன உளைச்சல் ஆகும் செயல்களைச் செய்யக்கூடாது. நல்ல புத்தகங்களை படிக்கவேண்டும். நல்ல விஷயங்களேயே கேட்க வேண்டும். தினமும் விஷ்ணு ஸஹஸ்ர நாமம் போன்ற ஸ்லோகங்களைச் சொல்ல வேண்டும்.*

*ஏழு முதல் பத்து மாதம் வரை உண்டான வளர்ச்சி அடுத்த மாதம்.*

**தொகுப்பு : பரிதி**

அத்வைத ஆசான்

# ஸ்ரீ ஆதிசங்கரர்

ஆதவன் அத்தியாயம் – 6 அவதார மஹிமை பாகம் 21

## காசியை நோக்கி

கோவிந்த பகவத்பாதரின் மஹாஸமாதிக்குப் பிறகு ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் தன் குருவின் கட்டளைப்படி காசியை நோக்கி தன் யாத்திரையைத் தொடங்கினார்.

ஸ்ரீ கோவிந்த பகவத்பாதருடைய சிஷ்யர்களில் சிலர் சங்கரரை பின் தொடர்ந்து அவருக்கு வழியில் மிக ஆதரவோடு கைங்கரியங்களைச் செய்தார்கள். அவர்கள் **"ஹஹயம்''**, **"சேதி''**, **"கௌசாம்பி"** முதலிய ராஜ்ஜியங்கள் வழியாகச் சென்று விந்தியபர்வதத்தைக் கடந்து யமுனா தீரம் வழியாக வெகுதூரம் நடந்து சென்று **"ப்ரயாகத்தை"** அடைந்தார்கள். (வெண்மை நிறத்தில் இருக்கும் கங்கையும், கருமை நிறத்தில் இருக்கும் யமுனையும் கூடும் இடமே "ப்ரயாகம்'') ஸ்ரீ சங்கரரும் மற்றவர்களும் "த்ரிவேணி ஸங்கமத்தில்'' ஸ்நானம் செய்தபின் யாத்திரையைத் தொடர்ந்து சில நாட்களில் காசியைச் சென்றடைந்தார்கள்

**"காசி"** என்று அழைக்கப்படும் **"வாரணாஸி"** ஒரு பெரிய பட்டணமாகவே இருந்தது. **"அஸி"** **"வாரணா"** (வருணை) என்று அழைக்கப்படும் இரண்டு நதிகள் கங்கையில் சேரும் இரண்டு கட்டங்களுக்கு நடுவில் இருக்கும் பஞ்சக்ரோச பூமியே **"வாரணாஸி".** ஏழு மோக்ஷபுரிகளில் ஒன்று காசி. காசியில் இறப்பவர்கள் பகவத்ப்ராப்தியை அடைகின்றனர் என்று புராணங்கள் கூறுகின்றன. தேவர்கள்கூட அங்குவந்து மரணமடைய விரும்புவர் என்று புராணங்கள் கூறுகின்றன.

காசியில் மிக முக்கியமான கட்டம் "மணிகர்ணிகா'' கட்டம். ஸ்ரீசங்கரரும் மற்ற யதிகளும்

இந்த மணிகர்ணிகா கட்டத்தில் தங்க தீர்மானித்தார்கள். இவர்களின் வருகையை அறிந்த காசி அரசர் தன் அரண்மனையிலேயே தங்குமாறு வேண்டிக்கொண்டார். அதை அவர்கள் பணிவுடன் மறுத்துவிட்டு மணிகர்ணிகையில் ஒரு பழமையான கோயிலில் தங்கினர். அவர்கள் தங்குதவற்கான ஏற்பாடுகளை காசி மஹாராஜா செய்தார்.

மணிகர்ணிகா கட்டத்தில் ஒரு குடில் போட்டு ஸ்ரீசங்கரர் தன் குரு ஸ்ரீகோவிந்த பகவத் பாதாளுடைய சிஷ்யர்களுடன் தங்கினார்கள். ஸ்ரீ சங்கரர் மணிகர்ணிகா கட்டத்தின் பெருமைகளைப் புகழ்ந்து ஒரு அஷ்டகம் பாடினார். அது தான் **"மணிகர்ணிகாஷ்டகம்"**.

ஸ்ரீ சங்கரர் காசியில் இருக்கும்போது அவரது வயது பதினொன்று மட்டுமே. அவர் காசி நகரை தன் உடலாக கருதி தானே இறைவனுடன் ஒன்றாக கலந்து வாழ்ந்த இடம் காசி.

ஆச்சார்யாள் காசியில் இருக்கும்போது சொல்லவொண்ணா ஆனந்தத்தில் ஆழ்ந்தவராக இருந்தார். தீர்த்த யாத்திரை என்னும் புனிதப் பயணங்களிலே தலை சிறந்ததாக கருதப்படும் காசி நகரத்தின் சிறப்பையும், அங்கே அடையும் அளவிலா ஆன்ம அறிவையும் உணர்த்தும் விதமாக காசி நகரத்தைக் குறித்து ஐந்து பாடல்கள் கொண்ட அழகிய ஸ்லோகத்தை இயற்றினார். அதுவே **"காசி பஞ்சகம்"** என்று அழைக்கப்படுகிறது. இது மிகவும் அபூர்வமான ஸ்லோகம். இந்த ஐந்து பாடல்களும் நம் உள்ளே உண்மையை விதைப்பன. இந்த ஸ்லோகத்தில் ஆச்சார்யாள் காசி என்பது என்ன என்பதற்கு அழகான விளக்கத்தை அளிக்கிறார். இந்த பஞ்சகத்தில் நான்காவது ஸ்லோகத்தில்...

**காஸ்யாம் ஹி காஸதே காஸீ காஸீ ஸர்வப்ரகாஸிகா/**

**ஸா காஸீ விதிதாயேன தேன ப்ராப்தா ஹி காஸிகா//**

**"காசி"** என்றால் பிரகாசிப்பது என்று பொருள்.

**“காஸீ காஸீ ஸர்வப்ரகாஸிகா”** இந்த காசிக்குத்தான் எல்லாவற்றையும் ஒளிபெறச் செய்யக்கூடிய தன்மை இருக்கிறது. காசியைப் பற்றி கூறும்போது ஸ்ரீ சங்கரர் **“காஸ்யாம் ஹி காஸதே** = எப்போதும் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஆத்மாவே'' என்கிறார். இந்த ஆத்மாவிற்குத்தான் எல்லாவற்றையும் பிரகாசிக்கச் செய்யக்கூடிய தன்மை இருக்கிறது.

அடுத்து ஐந்தாவது ஸ்லோகம் ஆரம்பத்தில் **“காஸி க்ஷேத்ரம் ஸரீரம்”...** “என்னுடைய சரீரமே காசி க்ஷேத்ரம்'' என்கிறார். “காசியை தேடிக்கொண்டு பிரயாகையை தேடிக்கொண்டு போவதைவிட குருவினுடைய சரணத்தில் வணங்கினால் அதுவே பிரயாகை” என்கிறார்.

இந்த “காசி பஞ்சகத்தை'' தினமும் பாராயணம் செய்வதால் காசியில் வாசம் செய்த புண்யம் கிடைக்கும். தொடரும்.....

---

## “நீர் – மோர் பந்தல்”

வேதபாரதி மற்றும் க்ரீன் வேளச்சேரி அமைப்பும் இணைந்து “வேளச்சேரியில் பெருங்குடி ரயில் நிலையம் அருகில் நீர், மோர் பந்தல் அமைத்து சித்ரா பௌர்ணமி முதல் சுமார் 35 நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது. இந்த நிகழ்வின் நிறைவு நாள் 10.06.2023 அன்று நடைபெற்றது.

இந்த நிகழ்வை வேதபாரதி செயலாளர் ஸ்ரீ வெங்கட்ராமன் அவர்கள் தலைமையேற்று நடத்திக் கொடுத்தார்கள்.

இந்த தொடர் நிகழ்விற்கு வேளச்சேரி குடியிருப்போர் நலசங்க பொறுப்பாளர் ஸ்ரீ குமாரராஜா மற்றும் ரோட்டரி சங்க செயலர் ஸ்ரீ பாலச்சந்தர் அவர்களும் ஆதரவு அளித்து முழு ஒத்துழைப்புடன் சிறப்பாக நடந்து முடிந்தது. ஒத்துழைப்பு அளித்த அனைவரையும் வேதபாரதி மனதார பாராட்டுகிறது.

## அறுபத்தி மூன்று (63) நாயன்மார்கள்

*அருணன்* *8/63*

# 8. கண்ணப்ப நாயனார்

ஆந்திர மாநிலம், திருப்பதியிலிருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ள "உடுப்பூர்" என்னும் ஊரில் "நாகன்" என்ற வேடர்குலத் தலைவன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு "தத்தை" என்ற பெயருடைய மனைவி இருந்தாள். வெகு காலமாக அவர்களுக்கு குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்ததால் தங்களுடைய குல தெய்வமான முருகனை வேண்டிக்கொண்டார்கள். முருகன் அருளால் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறக்கும் போதே உடல் வலிமையும் திண்ணமும் கொண்டிருந்ததால் குழந்தைக்கு "திண்ணன்" என்று பெயர் சூட்டி செல்லமாக வளர்த்து வந்தார்கள்.

வேடர் குல வழக்கப்படி குழந்தைக்கு உரிய பருவத்தில் வில் வித்தை கற்பித்தார்கள். திண்ணனுக்கு பதினாறு வயது நிரம்பியது. அவனுடைய தந்தை வயதானதால் வேட்டைக்கு செல்லமுடியாமல் போகவே திண்ணனை வேடர் தலைவனாக ஆக்கிவிட்டார்கள். குல வழக்கப்படி முதன் முதலில் மற்றவர்களுடன் காட்டிற்கு வேட்டைக்கு புறப்பட்டான்.

திண்ணன் காட்டில் வேட்டையாடி வேட்டையாடி வெகு தூரம் சென்றவுடன் ஒரு இடத்தில் காளத்தி மலைமீது ஒரு சிவலிங்கத்தைக் கண்டான். (அவன் கண்டது **"காளத்திநாதர்"**) சிவலிங்கத்தின் மீது பச்சிலையும், பூவும், திருநீரும் இருப்பதைக் கண்டான். எம்பெருமானுக்கு இப்படிச் செய்தால் உவப்பாக இருக்கும் என்று நினைத்து

*மலையடிவாரம் வந்து தான் வேட்டையாடிய பன்றியை நெருப்பில் வதக்கி துண்டுகளாக்கி சருகிலையால் ஒரு தொன்னை தைத்து அதில் அந்த பன்றி மாம்சத்தை வைத்துக்கொண்டான். அங்குள்ள செடிகளிலிருந்து மலர்களைப் பறித்தான். கைகளிலும் வில்லும் அம்பும் இருந்ததால் மலர்களைத் தலையில் செருகிக் கொண்டான். எம்பிரானுக்கு நீராடவேண்டுமே என நினைத்து தன் வாய் நிறைய நீரை ஏற்று மலை மீது புறப்பட்டான். ஒரு கையில் வில் அம்பு, மறு கையில் தொன்னையில் பன்றி மாமிசம், தலையில் பூக்கள், வாயில் தண்ணீர். மலையின் மீது சிவன் சிலை இருந்த இடத்தை அடைந்ததும் முதலில் சிவலிங்கத்தின் மீது இருந்த இலையையும், புஷ்பங்களையும் தன்னுடைய செருப்புக் காலால் துடைத்து நீக்கினான். பின்பு தன் வாயிலிருந்து நீரை சிவலிங்கத்தின்மீது உமிழ்ந்து அபிஷேகம் செய்தான். பிறகு மெல்ல வளைந்து தலையை அசைத்து தம் தலைமீதிருந்த பூக்களை சிவலிங்கத்தின் மீது உதிர்த்தான். பிறகு தான் கொண்டுவந்த பன்றி மாம்சத்தை தொன்னையுடன் கீழேவைத்து "இறைவா இந்த மாம்சம் மிகவும் சுவையாக இருக்கும் இதைத் தாங்கள் உண்ண வேண்டும்" என்றான். இப்படியே தினமும் செய்துவந்தான்.*

*அவனது பக்தியை உலகிற்கு உணர்த்த நினைத்த* **"காளத்தி நாதர்"** *ஒரு நாள் சிவலிங்கத்தின் ஒரு கண்ணில் இரத்தம் வடியச் செய்தார். திண்ணன் வழக்கம் போல் ஒரு கையில் மாம்சம், வாயில் தண்ணீர், தலையில் பூக்களுடன் வந்தபோது சிவலிங்கத்தின் ஒரு கண்ணில் இரத்தம் வடிவதைக் கண்டு துயரம் கொண்ட திண்ணன் பச்சிலை மூலிகையால் இரத்தத்தை நிறுத்தப் பார்த்தான். அது பலன் அளிக்கவில்லை. சிவனின் கண்ணிலிருந்து இரத்தம் வந்துகொண்டே இருந்தது.*

*மனம் மிகவும் வேதனை அடைந்து திண்ணனுக்கு*

**"உற்ற நோய் தீர்பபது ஊனக்கு ஊன் இடல் வேண்டும்"** என்னும் பழமொழி நினைவுக்கு வந்தது.

(சித்த வைத்தியத்தில் **"ஊனுக்கு ஊன்"** என்ற சித்தாந்தம் உண்டு. எந்த உறுப்பு மனிதனுக்கு பழுதாகி இருக்கிறதோ அந்த உறுப்பையே வேறு மிருகத்தில் இருந்து மூலிகைகளின் மூலம் பக்குவம் செய்து கொடுக்க அந்த உறுப்பின் குறைபாடு நீங்கும். இக்காலத்தில் உள்ளதுபோல் **"உறுப்பு மாற்று மருத்துவம்"** (Transplantation)அந்த காலத்திலேயே இருந்துள்ளது.

இந்த பழமொழி திண்ணனுக்கு நினைவிற்கு வந்ததும் அம்பை எடுத்து தன்னுடைய ஒரு கண்ணைத் தோண்டி இரத்தம் வடிந்த இறைவனின் கண்ணில் அப்பினான். உடனே இரத்தம் நின்றுவிட்டது. திண்ணனார் தம் கண்ணில் இரத்தம் வழிவதையும் கண் புண் ஆனதையும் உணரவில்லை. இறைவனுக்கு இரத்தம் நின்றதைக் கண்டு ஆனந்த கூத்தாடினான்.

நாயன்மார்கள் கதை தொடரும்......


ஹரி ஓம்
ஸ்ரீ குருப்யோ நம:

# வேதபாரதி

**யோகா வகுப்புகள் (30 நிமிடங்கள்)**

**வாரம் 2 நாட்கள் by Online**

**செவ்வாய், வியாழன் – காலை 5.30 மணி**
**சனி, ஞாயிறு – காலை 6.00 மணி**

ஆசிரியர் : யோகாச்சாரியார் **ஸ்ரீ J. சந்திரசேகர் ஜி**
திருச்சி

**யோகாவில் இணைவோம் உடல் மனம் புத்துணர்ச்சி பெறுவோம்**

தொடர்புக்கு :

**9443495950 / 9443453053**

## ஔவையார்

# "மூதுரை"

*"**மூதுரை**" = முதுமை + உரை = மூதுரை பழமையான அறக்கருத்துக்களைக் கொண்டிருப்பதால் "**மூதுரை**" என அழைக்கப்படுகிறது. இந்நூலில் மொத்தம் 30 வெண்பாப் பாடல்கள் அமைந்துள்ளன.*

## வெண்பா 10

**நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடி**
**புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் – தொல் உலகில்**
**நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு**
**எல்லார்க்கும் பெய்யும் மழை.**

**பொருள் : நெல் விளைந்திட** *இறைத்த தண்ணீர் வாய்க்கால் வழியாக ஓடி புல்லுக்கும் துணையாகிடும். பழைமையான இந்த உலகில் நல்லவர் ஒருவர் இருக்கிறார் என்றால் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை.*

*விளக்கம் : நெல் பயிருக்கு இறைக்கப்பட்ட தண்ணீரானது கால்வாய் வழியாக ஓடும்போது, கால்வாய் கரையில் உள்ள புற்களுக்கும் அது பயன்படுகிறது. அதுபோல் இந்த உலகில் குணத்தாலும், கொடைத் தன்மையாலும் சிறந்து விளங்கும் நல்லவர் ஒரே ஒருவர் இருந்தால் கூட அவர் நிமித்தமாக அனைவருக்கும் மழை பெய்து உலகம் செழிக்க உதவும்.*

தொகுப்பு : **பரிதி**

*இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்*
**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,** வேளச்சேரி

## வாழ்த்துக்கள்

வேதபாரதியின் வேத வகுப்பு பெரியவர் **ஸ்ரீ ஜெகதீஷ் மாமா பௌத்திரன் ஷ்யாம் சுந்தர் உபநயனம் 29.06.2023 வியாழக்கிழமை** சென்னை, குரோம்பேட்டையில் சிறப்பாக நடைபெற்றது. குழந்தைக்கு வேதபாரதியின் மனமார்ந்த ஆசீர்வாதங்கள்.

# வேதபாரதி - திருநெல்வேலி மஹாருத்ரம் - கோடி காயத்ரீ ஹோமம் - 2023

திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலிப் பகுதியில் விளங்கா நின்ற ஸ்ரீ சிவகாமி அம்பா சமேத ஸ்ரீ அழியாபதீஸ்வரர் கோவிலில் மஹா ருத்ரமும் கோடி காயத்ரீ ஹோமமும் நடைபெற இறைவன் திருவுள்ளம் கூட்டியது நம் பெரும்பேறே . ஸ்ரீ அழியாபதீஸ்வரர் கோவில் மிகவும் சிறப்பு வாய்ந்தது. இது மிகவும் உயிரோட்டமான கோவிலாகும். எப்படியெனில் இறைவருக்கும் இறைவிக்கும் முன்னால் எரியும் நந்தா விளக்கில் மேலும் கீழுமாக இருக்கும் மூன்று சுடர்களுள் முதல் இரண்டு சுடர்கள் மட்டும் காற்றில் அசையும். கீழே உள்ள இறுதிச் சுடர் அசையாது என்பது மிகவும் சிறப்பு வாய்ந்தது. இந்தத் திருக்கோவிலில் அண்ணாமலையார் திருப்பணிக்குழுவினர் மிகவும் க்ரமமாக திருப்பணி செய்து வருகின்றனர். தியாகராஜநகர் ஆஸ்திக சமாஜத்தில் உள்ள ருத்ரம் குழுவினரால் ஒவ்வொரு மாத முதல் ஞாயிற்றுக்கிழமையன்று ருத்ர பாராயணமும், 2வது ஞாயிற்றுக்கிழமையன்று அண்ணாமலையார் திருப்பணிக் குழுவினரால் உழவாரத் திருப்பணியும் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமையன்று திருக்கோவிலின் உள்ளே சுத்தம் செய்தல், நான்காவது ஞாயிற்றுக்கிழமை மீதி வேலைகளும் பல ஆண்டுகளாக மிகவும் நேர்த்தியாகச் செய்யப்பட்டு வருகிறது. இந்தத் திருப்பணிகளை சிவத்திரு.சிதம்பரம் அய்யா அவர்களின் மேற்பார்வையில் ஒருங்கிணைந்து திருப்பணிக்குழுவின் அன்னாரது குழுவில் உள்ள இருபால் அங்கத்தினர்களும் இணைந்து ஒருமனத்தோடு செய்து வருகின்றனர்.

சென்னை ஊரப்பாக்கத்தில் நடைபெற்ற கோடி காயத்ரீ ஹோமத்தில் கலந்துகொள்ள வாய்ப்பு

கிடைக்கப்பெற்ற ஸ்ரீ மணி வாத்யார் அதனால் மிகவும் ஈர்க்கப்பட்டு நெல்லையம்பதியிலும் அதைப்போன்று ஒரு ஹோமம் நடத்த அவாக்கொண்டார். ஏற்கனவே இத்திருக்கோவிலில் அறப்பணிகள் ஆற்றும் திரு.அண்ணாமலையார் திருப்பணிக்குழுவினர் நம் வேதபாரதி அமைப்பாளர்களை இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே தொடர்பு கொண்டு அங்கு மஹாருத்ரம் நடத்தக் கேட்டுக்கொண்டனர். அவர்கள் அவாவினையும் ஸ்ரீ மணி வாத்யார் அவர்களின் வேண்டுகோளையும் ஒருமுகமாகப் பூர்த்தி செய்ய 2023-ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23 முதல் 25-ஆம் தேதிகளில் நடத்திட அனைவராலும் ஏற்கப்பட்டது.

இதன் முதற்படியாக 26.03.2023 ஞாயிற்றுக்கிழமை சென்னை வேதபாரதி ஸ்ரீ வெங்கட்ராமன் அவர்களால் அன்று ஒரு ஜூம் மீட்டிங் ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் வேதபாரதி சென்னை அவர்கள் வேதபாரதியின் நோக்கம் மற்றும் செயல்பாடுகள் குறித்தும் மற்றும் இதற்கு முன் சென்னை ஊரப்பாக்கம், புதுச்சேரி, திருப்பூர், திருச்சி திருவானைக்காவல் மற்றும் கு ம்பகோணம் முதலிய இடங்களில் நடத்தப்பட்ட கோடி காயத்ரீ ஹோமங்கள் பற்றியும் நெல்லையில் இந்த ஹோமம் நிர்விக்கினமாகவும் சிறப்பாகவும் நடத்திட இதற்கென பரிந்துரை செய்யப்பட்ட அங்கத்தினர்களோடு பேசி என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என விரிவாக எடுத்துரைத்தார். அவரது ஆலோசனைப்படி நம் அங்கத்தினர்களுக்குத் தெரியப்படுத்த ஏற்கனவே இயங்கி வந்த ருத்ரம் குழு, ஆஸ்திக சமாஜம் குழு போன்ற குழுக்களில் உள்ள அனைத்து அங்கத்தினர்களையும் இந்த மஹா ஹோமத்தில் பங்குகொள்ளக் கேட்டுக்கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

தொடரும்....



# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் "இலவச காப்பகம்"



There has never been, nor will there ever be any gift equal to the gift of food..."
(Mahabharat - Anusasana Parva, 13.63.-6)



**V Krishnamoorthy**
Managing Trustee

பிரதி பலன் கருதாது நீ செய்யும் தர்மங்களால் கிடைக்கும் ஆனந்தமே மோக்ஷம். இது இப்பிறவியிலேயே கிடைக்கும். மறு ஜன்மம் வரை தர்மவான்கள் காத்திருக்க வேண்டாம்.

– ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவர்

ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவு கொடுத்து அவர்கள் உயிர் வாழ உதவுவதே எங்கள் லட்சியம்... எந்நிலையிலும் இறைவன் அருளால் அதை நிச்சயம் தொடர்வோம்... உங்களது மேலான நிதி உதவியுடன்..!!



அடையாறு கேன்சர் மருத்துவமனைக்கு சிகிச்சை பெற வரும் வெளியூர் ஏழை புற்றுநோயாளிகள் சென்னையில் பணம் செலவழித்து தங்கவும் – சாப்பிடவும் இயலாத நிலையில் அவர்களது இன்னொரு தாய்வீடான **நம்ம தர்மசாலா**வில் தஞ்சமடைகிறார்கள். நமது நம்ம தர்மசாலாவில் மூன்று வேளை உணவு, பாதுகாப்பான தங்குமிடம் ஆகியவை ஏழை புற்றுநோயாளிகளின் சிகிச்சை காலம் முழுவதும் **முற்றிலும் இலவசமாக** வழங்கப்படுகிறது. இங்கு ஏழை புற்றுநோயாளிகள் நிம்மதியாகவும், பாதுகாப்பாகவும், இக்கொடிய நோயிலிருந்து விரைவில் விடுபட்டு தங்கள் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழலாம் என்கிற தன்னம்பிக்கையுடனும் இருக்கிறார்கள். **ஏழை புற்று நோயாளிகள் பசி தீர்க்க உதவி செய்திடுங்கள். உண்மையான இன்பம் இதுவே என்று உணர்ந்திடுங்கள்...**

## PROGRESS OF CONSTRUCTION WORK AT OUR FREE OLD AGE HOME SITE



Shri **N Prakasam** (94 years), who donated for four rooms to our free old age home project, visits our Mamandur site with Shri American on 19.6.2023.

He shares his satisfaction with our Managing Trustee on the progress of our construction work.

செங்கல்பட்டு, மாமண்டூர் கிராமத்தில் சுமார் 30,000 சதுர அடி பரப்பளவில் பிரம்மாண்டமாக உருவாகி வரும் நமது **ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா நினைவு இலவச முதியோர் இல்ல** கட்டிடத்தின் தரை தள மேற்கூரை பணிகள் நிறைவு பெற்று, தற்போது முதல் தளத்திற்கான பணிகள் சிறப்புடன் நடைபெற்று வருகிறது. இத்திருப்பணிக்கு சுமார் ரூ.**8 கோடி** தேவை என்கிற நிலையில், மனிதநேயம் படைத்த நல்ல உள்ளங்களின் நல்லாசி மற்றும் தாராள நிதியுதவியை மனதார வேண்டுகிறோம். **2024 தை மாதம்** முதல் ஆதரவற்ற முதியவர்களுக்காக செயல்பட உள்ள நமது முதியோர் இல்லத்திற்குத் தேவையான தொகை நல்லவர்களிடமிருந்து நன்கொடையாக குறிப்பிட்ட காலத்திற்குள் கிடைத்துவிடும் என்பது எங்களது திடமான நம்பிக்கை.



**முற்றிலும் இலவசமாக** செயல்பட உள்ள முதியோர் இல்ல கட்டிடப் பணிகளுக்கு ரூ.5,00,000/- வழங்கும் நன்கொடையாளர்கள் விரும்பும் பெயரில் நமது முதியோர் இல்லத்தில் முதியோர் தங்கும் அறை ஒன்று அமைக்கப்படும். தாங்கள் விரும்பிய தொகை வழங்கும் நன்கொடையாளர்களின் பெயர்களும் நமது இலவச முதியோர் இல்லத்தில் தகுந்த முறையில் பதிவு செய்யப்படும்.





## தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்

- ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்
- ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்
- ரூ.25,000/- நிதியளித்து "நம்ம தர்மசாலா"வின் ஒரு நாள் செலவினை ஏற்கலாம்
- ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution by CHEQUE / NEFT / CASH / M.O.

Account Name: SRI MATHA TRUST Bank : INDIAN OVERSEAS BANK
Branch: Gandhi Nagar, Chennai-20 Current A/c No.:163502000001090
IFSC: IOBA0001635

வெளிநாட்டு வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் தங்களது நன்கொடையை கீழ்காணும் எங்களது FCRA A/c-க்கு அனுப்பலாம்
NAME : SRI MATHA TRUST S.B. A/C No. : 40384754521
BANK : STATE BANK OF INDIA BRANCH : NEW DELHI MAIN BRANCH
IFSC : SBIN0000691 SWIFT : SBININBB104

Donations to our Trust is exempted U/S.80(G) of the Income Tax Act.

Sri Matha Trust PAN No. **AACTS9747G**

நன்கொடை வழங்கும் அன்பர்கள் தங்களது விலாசம் மற்றும் "PAN" நம்பரை எங்களுக்கு அனுப்பவும்.

Admin Office: 95/42, Flat No.3, Ground Floor, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, [next to Harini Skin & Laser Clinic] Chennai-20. Tel: 044 - 24420727, 42661687

Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044 - 4509 8647

9500001065 / 9003247857 vkrishnamoorthy.smt@gmail.com www.srimathatrust.org


Rs.1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Shri Meera Labs Pvt Ltd
Our Chemistry ... Your Success
Contact
9952972436 / 7824807801
WOPPER
Fluid Chemistry

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

## திருப்தி




சென்றமாத தொடர்ச்சி...

இறைவனும், 'அப்படியே ஆகட்டும்'' என்று சொல்லி அவனை ஆசீர்வதித்தார். அத்தருணம் முதற்கொண்டு குழந்தை தனது குறும்புகளையெல்லாம் நிறுத்திக் கொண்டது. நாளடைவில், அதனுடைய சுறுசுறுப்பெல்லாம் மறைந்தது. யாரிடமும் குழந்தை சரியாகப் பேசாமல் மௌனமாய் இருந்தது. குழந்தையின் நிலைமையையெண்ணி அவன் உள்ளம் பதைபதைத்தது. தனக்கு உதவி புரியுமாறு மீண்டும் இறைவனிடம் சென்று கெஞ்சினான். அதன்பின், குழந்தை எல்லோரிடமும் சகஜமாகப் பேச ஆரம்பித்தது. இப்படியே பலவித பிரார்த்தனைகளுக்குப் பிறகு, அப்பக்தன் தன் மகனுக்குத் திருமணத்தையும் செய்து வைத்தான். மணமாகி சில வருடங்கள் கழிந்தும், மருமகள் கர்பம் தரிக்கவில்லை. ஆகவே, பக்தன் இறைவனை நாடி, "நீ எனக்குக் குழந்தையைக் கொடுக்காமலே இருந்திருந்தால், நான் மிகவும் சந்தோஷமாக இருந்திருப்பேன் என்று நினைக்கிறேன். இப்பொழுது என் பையனுக்குக் குழந்தைப் பிறக்காமலிருப்பதை நினைத்துப் பார்த்தால் என் மனம் மிகவும் வேதனையடைகிறது'' என்று கூறி வருத்தப்பட்டான்.

தொடரும்...

# மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்



அச்வமேத யாகத்தை நம் எல்லோராலும் பண்ண முடியுமா? அச்வமேதத்துக்கு சமமான பலனைத் தரும் ஒரு பணி இருக்கிறது. மற்றஎல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணிதான் அனாதைப் பிரேத ஸம்ஸ்காரம்.

பரோபகாரமாக, இறந்து போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும்போதே நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து நமக்கும் உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.

எந்த வீட்டில், யார் இறக்கும் தறுவாயிலிருந்தாலும் யாரும் கூப்பிடாமலேயே அங்கு சென்று 1008 தடவை ராமநாமம் சொல்லிவிட்டு வர வேண்டும். அந்த ஆத்மா முக்தி அடைந்துவிடும். இது ஜீவாத்ம கைங்கர்யம்.

முற்றும்.

**வருந்துகிறோம்**

1. புதுச்சேரி வேதபாரதி பொறுப்பாளர் ஸ்ரீ NJL ரமேஷ் அவர்களின் தாயார் **ஸ்ரீமதி லலிதா ஜெயராமன் 23.06.2023** அன்று மஹா பெரியவர் பாதம் அடைந்தார்கள். அம்மாவின் ஆன்மா சாந்தி அடைய வேதபாரதி மனதார ப்ரார்த்திக்கிறது.

2. வேதபாரதியின் முக்கிய உறுப்பினர் நங்கநல்லூர் ஸ்ரீ சங்கர் அவர்களின் மாமனார் **ஸ்ரீ ஸ்ரீநிவாசராகவன் 22.06.2023** அன்று இறைவனடி சேர்ந்தார்கள். வேதபாரதியின் சார்பில் அன்னாரது ஆன்மா சாந்தி அடைய ப்ரார்த்திக்கிறது.

# "ஆசான்"

**மதுரை முரளி**

சென்றமாத தொடர்ச்சி...

"நா.. நான் பிரகாஷ். ஆமா, நம்ம ஊர் நடுநிலைப்பள்ளி எப்படி இருக்கு? பாதை எந்த பக்கம்?'' முகத்தில் புன்னகையுடன் வினவினான்.

"சார்.. இதோ இப்படி கிழக்காலப் போய், வடக்கால திரும்பினா.. பெரிய பம்புசெட் வரும். அதை ஒட்டி நடந்தா.. கொஞ்சம் தொலைவில் இருக்கு. யாரைப் பார்க்கணும்? பள்ளிக்கூடம் அடைக்கிற நேரம்'' குறுகுறுப்பாய் பிரகாஷைப் பார்த்துக் கேட்டான்.

"அப்ப, நான் வேகமா போறேன். பை.. பை" சொல்லிவிட்டு விரைவாய் நடக்க,

குழப்பமாய் கையை ஆட்டினான் சிறுவன் முருகன்.

முருகன் கூறிய பம்ப்செட் அடையாளம் கண்ணில் பட, சுற்று முற்றும் பார்த்த பிரகாஷின் பார்வையில்.. மங்கலாய் பள்ளிக்கூடம்.

பம்ப்செட் தண்ணீராய் உற்சாகம் உடம்பெல்லாம் பற்றிக்கொள்ள, ஓட்டமும் நடையுமாய் பள்ளியை அடைந்தான் பிரகாஷ்.

"அரசு நடுநிலைப்பள்ளி'' அரைவட்ட வடிவ வளைவு போர்டு.

பெயிண்டு உதிர்ந்து வருடங்கள் பல இருக்கும்.

சற்று யோசனையுடன் உள்ளே நுழைந்தவன், முன்னே ஓர் ஆசிரியர் கூடவே ஒரு ஆசிரியை.

கைக்கட்டி நின்றவர்களின் முகத்தில் கலவரம் அப்பியிருந்தது.

"வ..வணக்கம் சார்'' இருவரின் பிசிறடித்த குரல்கள். அவர்களின் பின்னால்.. ஓரமாய் குச்சி கிரிக்கெட் பையன் முருகன்.

"பக்" கென சிரிப்பு வந்தது பிரகாசுக்கு.

"டேய் முருகா, அதுக்குள்ள எப்படிடா இங்கே? அதுவும் எனக்கு முன்னாடி?" ஆச்சரியப்பட்டவனாய் பிரகாஷ்.

"சார்.. நா.. நான் குறுக்கு பாதையிலே ஓடி வந்து, நீங்க வர விவரத்தை சொல்லிட்டேன்" மூச்ச வாங்கினான் முருகன்.

"மீண்டும் "பக்" பிரகாஷிடமிருந்து. இம்முறை ஆசிரியர்கள் இருவரும் இலேசாக இணைந்தனர்.

"சார்.. நான் அகிலன். இந்த பள்ளியில் தலைமை ஆசிரியர். இவங்க ஹேமா.. இன்னொரு ஆசிரியை. "சொல்லியபடி மீண்டும் வணக்கம் தெரிவிக்க,

"நோ.. நோ. நான் தான் உங்களை கும்பிடணும். என் பெயர் பிரகாஷ். இந்த பள்ளிக்கூடம்.. இல்லை, இந்த கோயிலைப் பார்த்து கும்பிட்டு வழிபடத் தான் நான் சென்னையில் இருந்து வந்திருக்கேன். "எனத் தொடங்கி,

தன்னைப்பற்றி.. தன் நிலைப் பற்றி எல்லாம் சுருக்கமாய் விளக்கியவன்,

"ஹேமா டிச்சர், நீங்க அநேகமா சற்று தொலைவிலிருந்து வருவீங்கன்னு நினைக்கிறேன். "என இடைவெளி விட,

"ஆமா சார், இப்ப.. அதாவது மாலை 5.00 மணிக்கு பஸ். இங்கிருந்து பத்து கிலோ மீட்டர் பயணம் வீட்டுக்கு. இந்த பஸ்சை விட்டா, அப்புறமா 7 மணி வரை காத்திருக்கணும்". பதட்டமாய் பேசியவளை இடைமறித்த பிரகாஷ்,

"மன்னிக்கணும். நீங்க கிளம்புங்க. அகிலன் சார்.." அவர் பக்கம் திரும்ப,

"அவசரமேயில்லை. நான் இதே ஊர்ல தான் ஒரு வீட்ல தங்கியிருக்கேன். இன்னைக்கு இரவு நீங்க விருப்பப்பட்டா... தங்கலாம்".

தொடரும்....

# இராமாயணம் தரும் படிப்பினை

சென்றமாத தொடர்ச்சி...

பரதன் கூறிய பாபச்செயல்கள் மிகவும் கடுமையானவை, கொடூரமானவை, அதை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று பரதன் கூறுகிறான். பரதன் செய்யாத தவறுக்கு தான் பொறுப்பேற்கிறேன் என்கிறான். நடைமுறை வாழ்க்கையில் மனிதன் செய்த தவறைக் கூட ஒத்துக் கொள்வதில்லை. மேலும் தான் செய்தது தவறே இல்லை என்று ஆணித்தரமாக கூறும் அளவிற்கு சமூதாய மதிப்பீடுகள் தரம் தாழ்ந்து இருக்கின்றன. தவறுகள், பாபச்செயல்களைக் கண்டு யாரும் அஞ்சுவதில்லை. இராமாயண நாயகர்கள் எப்படி வாழ்ந்தார்கள். அது தான் நமக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும்.

பிறகு வசிஷ்டர் மற்றும் அரண்மனையில் உள்ள பெரியவர்களின் வேண்டுகோளை ஏற்று பரதன் தசரதனுக்கு இறுதிச் சடங்குகளைச் செய்கின்றான். தசரதன் இறந்த சமயத்தில் அவருடைய மகன்கள் நால்வரும் அருகேயில்லை, தந்தையின் வாக்கை காப்பாற்ற இராமன் வனம் சென்றான். அவனுடன் சீதை, இலக்குவனும் சென்றனர். பரதன் வரும் வரை தசரதனின் உடல் பாதுகாக்கப்பட்டு வந்தது. பரதன் இறுதிச் சடங்குகளைச் செய்தான்.

வசிஷ்டர் தலைமையில் அரசவை கூடி பரதனை ஆட்சிப் பொறுப்பை ஏற்குமாறு கூறினார்கள். பரதன் மறுத்துவிட்டான். மேலும் பரதன், நமது குலவழக்கப்படி மூத்த மகன் தான் "ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டும் அதுதான் தர்மம், மந்தரையின் துர்போதனை மூலம் எனது தாய் செய்த செயல்கள் மூலம் மன்னர் உயிரிழந்தார் எனது சகோதரன் வனம் சென்றான். அயோத்தி நகரம் முழுவதும் சோகத்தில் ஆழ்ந்தது. அதனால் வனம்

சென்ற இராமனை நாட்டிற்கு அழைத்து முடி சூட்ட ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள். ஒரு வேளை இராமன் வர மறுத்தால் நானும் வனத்தில் தங்கப் போகிறேன் என்று கண்ணீருடன் கூறினான்". பரதனின் உயர்ந்த பேச்சால் அரசவையில் உள்ளவர்கள் கண்ணீர் சிந்தினர். கைகேயி செய்த காரியத்திற்கு இது பிராயச்சித்தமாக இருந்தது.

பட்டாபிஷேகத்திற்கு என்று தயார் செய்யப்பட்ட பொருட்களுடன் நகரில் உள்ள முக்கியஸ்தர்கள், அரண்மனை அமைச்சர்கள், எல்லோரும் பரதனுடன் செல்ல முடிவு செய்தனர். இதைக் கேட்ட ஊர் மக்களும் பரதனுடன் செல்ல முடிவு செய்தனர். தசரதனைப் போல அவரது மகன்களும் தர்மவான்கள் அதனால்தான் அயோத்தி நகரம் தர்மக்ஷேத்திரமாக இருந்தது.

"யதா ராஜா ததா பிரஜா" மன்னனைப் போல மக்களும் தர்ம சிந்தனையுடையவர்களாக இருந்தார்கள்.

**- காந்தாமணி நாராயணன்**

## வாழ்த்துக்கள்

1. வேதபாரதியின் மூத்த உறுப்பினர் மேற்கு மாம்பலம் ஸ்ரீ தர்ம சுப்ரமணியன் அவர்களுடைய தௌஹித்ரன் **சிர.ஸ்ரீநிவாசனின் உபநயனம் 29.06.2023 வியாழக்கிழமை** மேற்குமாம்பலத்தில் நடைபெற்றது. வேதபாரதி சார்பில் மனமார்ந்த ஆசீர்வாதங்கள்.

2. வேளச்சேரி வேதபாரதியின் மூத்த உறுப்பினர் ஸ்ரீ நாகராஜ் - ஸ்ரீமதி சீதா நாகராஜன் அவர்களின் புதல்வன் **ஸ்ரீ கண்ணன் - ஸ்ரீமதி ரேகா தம்பதியினரின் 25-ம் ஆண்டு திருமண நாள் விழா 16.06.2023** அன்று வேளச்சேரி ஸ்ரீ கணபதி சச்சிதானந்த ஆசிரமத்தில் விமரிசையாக நடைபெற்றது. வேதபாரதியின் வாழ்த்துக்கள்.

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- ❖ Breast Pumps
- ❖ Blood Glucose Meters
- ❖ BP Meters
- ❖ Alpha Beds
- ❖ Adult Diapers
- ❖ Under Pads
- ❖ Wheel Chairs
- ❖ Physio Products
- ❖ Home Sleep Study
- ❖ Oxygen Concentrator
- ❖ CPAP / Bi Pap
- ❖ Pulse Oxymeters
- ❖ Nebuliser
- ❖ Morning Walker
- ❖ Weighing Scale
- ❖ Air Purifier




**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

# தர்மத்தின் குரல் புத்தகம் – ஆன்லைன் கருத்தரங்கம் 2023

*பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் எழுதிய "தர்மத்தின் குரல்'' புத்தகம் பற்றிய தொடர் கருத்தரங்கம்* Zoom *வாயிலாக 04.06.2023 ஞாயிற்றுக்கிழமை மதியம் 3.30 மணிக்கு நடைபெற்றது. முதலாவதாக 26.01.2023 வேளச்சேரி ஸ்ரீ ரகுநாத் மாமா அவர்கள் இல்லத்திலும், 2வதாக 19.03.2023, ஞாயிறு அன்று* Zoom *வழியாகவும், 3வதாக, 23.04.2023 ஞாயிறு அன்று* Zoom *வழியாகவும் நடைபெற்றது.*

*4வது மாத கருத்தரங்கம் 04.06.2023 அன்று 3.30 மணிக்கு துவங்கியது ஸ்ரீமதி காமாட்சி இறைவணக்கம் பாடினார். ஸ்ரீ வெங்கட்ராமன் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். முதலாவதாக பள்ளிக்கரணை ஸ்ரீ சுந்தரம் அவர்கள் "நமது கடமைகள்'' எனும் தலைப்பில் உரையாற்றினார். திருச்சி ஸ்ரீ நந்தகுமார் "வேதங்கள்'' குறித்து புத்தகத்தில் உள்ள கருத்துக்களை பதிவிட்டார். மதுரை ஸ்ரீமதி.நீலா முரளிதரன் அவர்கள் மொழிகளின் வடிவம். அவை உருவான விதம் குறித்து பேசினார். சென்னை ஸ்ரீமதி.ஜெயந்தி அவர்கள் "மறுபிறப்பு'' எனும் தலைப்பில் புத்தகத்தில் உள்ள கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.*

*இறுதியாக ஸ்ரீக்ருஷ்ண ஜகந்நாதன் ஜி "தர்மத்தின் குரல்'' புத்தகத்தில் உள்ளதை இன்று பேசியவர்களின் தொகுப்புகளின் அடிப்படையில் நமக்கு விளக்கி கூறினார்.*

*ஆசிரியர்.*

## வாழ்த்துக்கள்

*வேதபாரதியின் முக்கிய உறுப்பினர்* **ஸ்ரீ அனந்தக்ருஷ்ணன் சகோதரர் ஸ்ரீ சுப்ரமணியம் தம்பதியருக்கு சஷ்டியப்தபூர்த்தி 03.07.2023, திங்கட்கிழமை** *ஆதம்பாக்கத்தில் நடைபெற உள்ளது. வேதபாரதியின் சார்பில் மனமார்ந்த வாழ்த்துக்கள்.*

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 3 பகுதி - 31

*எதுவும் அறியாமல், காடுகளில் வாழ்ந்து திரிந்த மிகப் பழமையான "குகை மனிதன்" என்பதிலிருந்து இன்று விரல் நுனியில் விஷயங்களை வைத்திருக்கிறோம் என்றால் அதற்கு காரணம் குருமார்கள் மற்றும் ஆசிரியர்கள் தான்.*

**"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றையவை"**

*(குறள் – 400, அதிகாரம் – 40)*

*"எத்தனைதான் அள்ளிக் கொடுத்தாலும் கல்விச் செல்வம் குறையாது. ஆகையால் அழிவில்லாத, சிறப்புடைய செல்வம் கல்வியறிவு தான். மற்ற செல்வங்கள் ஒருவரிடத்தில் குறையாமலும் நீங்காமலும் தங்கியிருப்பதில்லை'' என்கிறது வள்ளுவம்.*

*ஒரு தலைமுறையிலிருந்து மறு தலைமுறைக்கு அறிவாற்றலை எடுத்துச் செல்பவர்கள் ஆசிரியர்கள் அல்லவா!*

*ஆசிரியர்கள் தங்கள் அறிவு எனும் கருவூலத்தில் தேக்கி வைத்திருக்கும் பெருஞ்சொத்து அறிவாற்றல் நிறைந்த தகவல்கள்.*

*இன்று கையிலிருக்கும் மொபைலில் தேவையற்ற பல விஷயங்களை தேக்கி வைத்திருக்கின்றோம். ஆனால் அன்று ஆசிரியர்கள் தேக்கி வைத்து அளித்தவை தானே. இவற்றை சனாதன தர்மம் நமக்கு ஓயாது அளித்துக் கொண்டே இருக்கின்றது.*

*ஆசிரியர் என்பவர் ஒரு மாணவனின்*

வாழ்க்கையில் மாறிக் கொண்டேயிருக்கலாம். அவர் யாராக வேண்டுமானாலும் இருக்கலாம், எந்த இனம், மொழி, நாடு, ஜாதி, மதத்தைச் சார்ந்தவராக இருக்கலாம்.

அந்த ஆசிரியர்கள் ஒரு மாணவனின் மனதில் உண்மை. நேர்மை, தர்மம், பயமின்மை, தேசப்பற்று, வீட்டுப்பற்று, குலதெய்வப்பற்று, பெற்றோர்கள் மீது வைக்க வேண்டிய அசையாத நம்பிக்கை ஆகியவற்றை விதைக்கின்றாரோ அவர்தான் ஆசிரியராகப் போற்றப்பட வேண்டியவர்.

பூஜ்யமாக பள்ளியினுள்ளே வரும் மாணவனை மிகப் பெரிய ஆளுமை மிக்கவனாக மாறக்கூடிய வாய்ப்புடன் வெளியே அனுப்புபவர் ஆசிரியர்.

தினம் ஆசிரியரிடமிருந்து கற்று வீட்டிற்கு வரும் மாணவனுக்கு, அவனுடைய ஆசிரியரோடு ஒத்துப்போகும் பெற்றோர்கள் கட்டாயம் தேவை.

பெற்றோர்களான நீங்கள் செய்வதைத் தான் உங்கள் குழந்தை செய்யும் என்பதைப் புரிந்து உங்கள் குழந்தையின் ஆசிரியருக்கு மரியாதை அளியுங்கள். குழந்தைகளின் எதிரில் அவர்களை அவமதித்துப் பேசாதீர்கள்.

பள்ளியில் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் மாணவ மணிகளை ஆசிரியரிடம் பேசச் சொல்லுங்கள். குற்றங்குறை கூறாமல் பிரச்சனையை மட்டும் முன்வைப்பது எப்படி என்று கற்றுக் கொடுத்து பேச வையுங்கள்.

ஒரு ஆசிரியரின் கட்டளையை மதித்து வீட்டில் ஒரு குழந்தை பணி செய்து கொண்டிருந்தால், “ஆமாம், பெரிசா டீச்சர் சொல்லிட்டாளாம்” எனும் நக்கலை தவிர்த்து விடுங்கள்.

ஒழுக்கம் அளிக்க வேண்டுமென்றால் கட்டளைகளும், அதில் கடுமையும் நீங்களும் வீட்டில்

உபயோகிக்கும் விஷயம் தானே ஏன் ஆசிரியர்கள் அதை உபயோகித்தால் உங்களுக்கு கோபம் வருகின்றது?

ஒருவேளை தவறு உங்கள் குழந்தையிடமிருந்தால் நீங்கள் கோபப்படாமல், “தவறு செய்தால் மன்னிப்பு கேட்பது என்பது மீண்டும் ஒரு தவறைச் செய்யாமல் இருப்பதற்கான கைத்தடி” என்று பொறுமையாக கற்றுக் கொடுங்கள்.

அடுத்த மாதம் மீண்டும் பல “டிப்ஸ்” களுடன் உங்களுடன் பேசுகிறேன். தொடரும்...

## வேதபாரதி குடும்பத்தில் அதிக மதிப்பெண் பெற்ற சாதனை குழந்தைகள்

## SSLC & 12th STD BOARD EXAM WINNERS 2023

| S. No. | Name of Student | Class |
|---|---|---|
| 1 | RAGINI MV | X |
| 2 | SREYA R | X |
| 3 | SHYAM K R | XII |
| 4 | ATHITHIYA P A | XII |
| 5 | NIRANJANA R | X |
| 6 | AARATHI J | XII |
| 7 | ANIRUDHHAN V N | XII |
| 8 | AVINASH R | XII |
| 9 | ISHWAR | XII |
| 10 | JANHAVI | XII |
| 11 | ASHWIN NARAYANAN P | XII |
| 12 | SIVARAM R | X |
| 13 | SRISRUTHI B | X |
| 14 | PADMAJA R | X |
| 15 | SUDHARSHAN V | XII |
| 16 | SAISHRUTHI S | XII |
| 17 | CHITHRA SP | X |
| 18 | SRI ARYA R | X |
| 19 | ADITHYA J S | X |
| 20 | MAHATHI N | XII |
| 21 | SAHASRA P | XII |
| 22 | VARSHINI V | XII |
| 23 | KISHORE H | XII |
| 24 | GOKUL R | X |
| 25 | RUDHRESH DIKSHITH | X |
| 26 | ARTHYA H | XII |
| 27. | S. SIDDHARTH | X |


உ
திருமண பொருத்தம் இலவசம்
(அனைத்து சமூகத்தினருக்கும்)
வாட்ஸ்அப் மூலம் மட்டும்
பையன்கள் பெண்கள் ஜாதக நகல்களை
வாட்ஸ் அப்பில் அனுப்புதல் வேண்டும்.
Brahmin Kalyanam.com
An Auspicious Beginning ...
EXCLUSIVE PORTAL FOR BRAHMINS
BK MATRIMONY
An Auspicious Beginning ...
தேதியூர். V.J. ராமன்
ஆத்மார்த்த ஜோதிடர்
9003195599
9445230940

# சாதனைப் பறவைகள்

**டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்**

## தாடகை என்றொரு சிவபக்தை



தாடகை என்றதும் அனைவருக்கும் நினைவுக்கு வருவது, ராமாயணத் தாடகைதான். இவர் வேறு, ஞானசம்பந்தர் காலத்திற்கு முன்பே இவர் வசித்திருக்க வேண்டும் என்று ஆன்மீக ஆய்வுகள் கூறுகின்றன. இவரின் சிவ பக்தியின் மகிமையை அறிந்து கொள்வதற்கு நாம் மாயவரம் அருகே வரலாற்றுச் சிறப்பு மிக்க **"திருப்பனந்தாள்"** திருத்தலத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ப்ருஹன் நாயகி சமேத அருண ஜடேஸ்வரர் ஆலயத்தின் ஸ்தலபுராணத்தை அறிந்து கொள்ள வேண்டும். **(நன்றி : டிஜிட்டல் ஸ்கெட்ச் : சுமதி)**

இவ்வாலயத்தின் அன்றைய காலத்து அர்ச்சகர் மகள் தான் சிவபக்தை தாடகை. சிறு வயதிலிருந்தே தன் தந்தையுடன் இவ்வாலயத்தின் அனைத்துப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாள். பூக்களைப் பறிப்பதும், தொடுப்பதும் அதனை அழகிய மாலைகள் ஆக்கி, சிவபெருமானுக்குப் போட்டு அழகு பார்ப்பதும் தாடகையின் தினப்படி தீவிர விருப்பமாக இருந்தது. சில சமயங்களில் சிவபெருமானுக்குத் தானே அர்ச்சனை செய்ய வேண்டும் என்றும் ஆசைப்படுவாள் தாடகை.

இந்தச் சிறுவயதிலேயே தன் மகள் இவ்வாறு

சிவகைங்கர்யத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருப்பது எந்த தந்தைக்குத்தான் பெருமையாக இருக்காது? அதுவும் தாடகையின் தந்தையோ சிவாச்சாரியார். மகளின் சிவபக்தியினைக் கண்டு, அகம் மகிழ்ந்து, தாடகையே சிவபெருமானுக்கு அர்ச்சனை செய்வதையும் தடுக்கவில்லை. ஆனந்தத் துள்ளலுடன், தாடகை எனும் பெண், தூய மனதுடன் அருணஜடேஸ்வரர் சுவாமிக்கு அழகிய வண்ண வண்ண மலர்களைக் கொண்டு அர்ச்சனைகள் செய்து ஆனந்தமடைந்தாள். தந்தையோ மிகவும் பரவசப்பட்டுப் போனார். எத்தனை தவம் செய்திருந்தால் இத்தகைய ஒரு பெண் குழந்தைக்குத் தந்தையாக இருக்கும் பேறு கிடைத்திருக்கும் என்று நினைத்திருப்பார் என்பதில் நமக்கு சந்தேகமில்லை.

ஆலயங்களில் அர்ச்சகர்கள் மட்டுமே ஸ்வாமிக்கு அபிஷேக ஆராதனைகள் செய்வதும், வஸ்திரங்கள் சாற்றி அலங்காரங்கள் செய்வதும், திருவுருவங்களை ஸ்பரிசித்து, மலர்மாலைகள் சூட்டுவதும், நைவேத்யங்கள் செய்து, தீப ஆராதனைகள் செய்வதும் வழக்கமாக இருந்து வருகிறது. இப்போதும் அப்படித்தானே இருப்பினும் நம் தாடகை ஒரு நாள் மிக அழகிய, மிகப் பெரிய மலர்மாலையைத் தன் கைகளால் தொடுத்து உருவாக்கி, அதனைத் தானே அருண ஜடேச்வர ஸ்வாமிக்கு அணிவிக்கவும் விரும்பினாள். அவள் விருப்பப் படியே ஆகட்டும் என்று விட்டுவிட்டு அர்ச்சகர் ஆலயத்தின் பிறபணிகளைச் செய்வதற்குச் சென்றுவிட்டார்.

தாடகை, தான் தொடுத்த மிகப் பெரிய மாலையைக் கைகளில் ஏந்திக் கொண்டு அருண ஜடேஸ்வரரின் திருவுருவத்திற்கு அருகே செல்லும் போது, அதனை அவள் மிகவும் எட்டி நின்று

*சாற்றவேண்டியதாக இருந்தது. அவ்வாறு சிரமத்துடன் முயற்சிக்கையில் அவளது மேலாடை சரிந்தது, ஒரு கையால் அதனை சீர்படுத்த முயன்றாள். மறுகையில் பிடித்திருந்த மிகப்பெரிய மாலையை சமாளிக்க முடியவில்லை. அது தரையில் படுவதையும் விரும்பவில்லை. ஒருவாறு தன் மேலாடையைத் தோள்பட்டையில் இடுக்கிக் கொண்டே, ஸ்வாமிக்கு மாலையைத் தன் இரு கைகளால் அணிவிக்க முயற்சித்தாள். இயலவில்லை. மீண்டும் மீண்டும் முயற்சித்தாள், முடியவில்லை. மனம் வேதனைப் பட்டாள். "அப்பா, எனக்கு ஏன் இந்த சங்கடம்? இந்த மாலையை உனக்கு என்னால் அணிவிக்க இயலவில்லையே, நான் என்ன செய்வேன்?" என்று விம்மி அழுதாள். அதன் பிறகு நடந்ததுதான் உலகமகா அதிசயம்.!*

*அருணஜடேஸ்வரர் அகம் நெகிழ்ந்து போனார். தாடகையின் தாங்க வொண்ணா துயரம் கண்டு, கருணா மூர்த்தி, க்ருபாசாகரன், பக்தப்ரியன், பரம தயாளன் ஒரு அற்புதத்தை நிகழ்த்தினார். ஆவுடையார் மேலிருந்த சிவலிங்கம் ஒரு புறமாகத் தாழ ஆரம்பித்தது, தாடகை என்கிற சிவபக்தையின் உள்ளம் குளிரும் வண்ணம், அவளுக்கு இயலும் வகையில் தன்னை வளைத்துக் கொண்டது. தாடகை தன் இருகைகளாலும் பற்றியிருந்த மலர் மாலையை லிங்கத்தின் மீது அவள் விரும்பிய வண்ணம் சாற்றிவிட்டு நின்று அழகு பார்த்தாள். மனம் திருப்தி அடைந்தாள். துள்ளிக் குதித்துக் கொண்டு வீடு போய் சேர்ந்தாள். தந்தையிடம் ஒன்றும் சொல்லவில்லை. மாலையில் அர்ச்சகர் கர்ப க்ருகத்தைத் திறந்தார். அதிர்ந்து போனார்...*

*தாடகை எனும் சிவபக்தையின் மகிமை தொடரும்.*

# அறிவோம் ஆழ்மனதின் அளப்பறியா ஆற்றல்

திருச்சி கணேசன்

*சென்ற மாத தொடர்ச்சி...*

*அடுத்து அச்சுறுத்தல் -- ஒவ்வொரு நாளும் நாம் எத்தனையோ அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது. எந்தச் சூழ்நிலையும் நம்மை அச்சுறுத்தாதவாறு அவற்றையும் நமக்குச் சாதகமாகவும் சந்தர்ப்பமாகவும் மாற்றிக் கொண்டால் வெற்றி நிச்சயம்.*

*இவ்வாறு நம் பலம், பலவீனம், சந்தர்ப்பம் மற்றும் அச்சுறுத்தல் ஆகியவற்றைப் பட்டியலிட்டு அதை நமக்குச் சாதகமாக சரியான நேரத்தில் உபயோகித்தால் நாம் எந்த சூழ்நிலையிலும், எவ்வளவு போட்டிகள் நிறைந்த நேரத்திலும் தொடர் வெற்றிகளைப் பெறத் தகுதி உள்ளவர்களாவோம்.*

*வெளிமனம் மற்றும் ஆழ்மனம் :*

*கடவுள் நம் அனைவரையுமே இரண்டு மனங்களுடன் படைத்திருக்கிறார். ஒன்று வெளிமனம் மற்றது ஆழ்மனம். வெளிமனத்திற்கு நல்லது / கெட்டது இதைச் செய்தால் உலகம் போற்றும் இதைச் செய்தால் தூற்றும் என்று பகுத்து அறியும் திறன் உள்ளது. ஆழ்மனதிற்கு இதுபோல் பகுத்தறியும் தன்மை கிடையாது. வெளிமனம் நாம் உறங்கும் போது உறங்கி விழித்திருக்கும் போது விழித்திருக்கும். ஆனால் ஆழ்மனம் எப்போதும், நாளின் இருபத்து நான்கு மணிநேரமும் வாரத்தில் ஏழுநாட்களும் மாதத்தில் முப்பது நாட்களும் வருடம் முன்னூற்று அறுபத்து ஐந்து நாட்களும் நமது ஆயுட்காலம் முழுவதும் இரவும் பகலும் எந்நேரமும் விழித்திருக்கும். ஒருவரின் மனைவி*

அவர் கூறுவதில் 70 முதல் 75 விழுக்காடு கேட்டு நடந்து மீதி 25 - 30 விழுக்காடு தானே பகுத்தறிந்து தன் முடிவுப்படி நடப்பாள். அவரின் குழந்தைகள் 80 முதல் 85 விழுக்காடு தந்தை சொற்படி நடப்பார்கள். ஆனால் இவர்களின் ஆழ்மனமோ நூறு விழுக்காடு அப்படியே கீழ்படிந்து நடக்கும். இதனால்தான் அந்தக் காலத்தில் ஞானிகள் ''எப்போதும் நல்லவைகளை நினை : நல்லவைகளைப் பேசு : நல்லதைச் செய் : நல்லது தானே வரும்'' என்று கூறியுள்ளார்கள்.

ஆழ்மனம் ஒரு விளைநிலம் :

நாம் இப்போது நம்முடைய ஆழ்மனத்தை விளை நிலத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்போம். ஆழ்மனத்தை நல்ல விளை நிலமாகவும் நம்மை ஒரு தோட்டக்காரனாகவும் எண்ணிக் கொள்வோம். நல்லதொரு விளை நிலத்தில் நெல் போட்டால் நெல் பலமடங்கு விளையும். அதே நிலத்தில் முள் பயிரிட்டால் முள்ளும் மேலும் பலமடங்கு முட்புதராக வளரும். அதே போல் எதுவுமே பயிரிடாமல் தரிசு நிலமாகப் போட்டால் கூட தானாகவே கள்ளிச்செடி வகைகள் முளைத்து வளர்ந்து விடும். அது போலவே ஆழ்மனம் என்ற விளை நிலத்தில் நல்ல சிந்தனைகள், நல்ல விஷயங்கள், நல்ல எண்ணங்கள் என்னும் விதைகளைப் பயிரிட்டால் நல்லவைகளே நடக்கும் : நல்லவைகள் கிடைக்கும். வெற்றி மேல் வெற்றி நமக்கு வரும்.

**உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் - வானமே எல்லை :**

''எண்ணம் போல் வாழ்க்கை'' ''மனம் போல் மாங்கல்யம்'' ''உன் வாழ்க்கை உன் கையில்'' போன்ற பழமொழிகளை நாம் அறிவோம்.

தொடரும்...

## தருவின் நிழலில்
## கருவேல் மரம் / கருவ மரம்
### (ACACIA NILOTICA)

பொதுவாக வேலன் மரங்கள் கூரிய முட்கள் உடையது. இந்த முட்களின் கூரிய தன்மையை சுட்டிக்காட்டும் விதமாகவே “அக்கேசியா’’ எனப்படுகிறது. வேலன் மரங்களில் அறுநூற்றுக்கும் மேற்பட்ட வகைகள் உலகளவில் இருப்பதாக ஒரு ஆய்வு கூறுகிறது. என்றாலும் கருவை, நீர்க்கருவை, வெவ்வேல், பரம்பை, கடைவேல், சுரங்காளி போன்றவகைகளே தமிழகத்தில் நிறைந்துள்ளன.

கருவை மரங்கள் கரிசல்மண் நிலங்கள், சரளைமண் நிலங்களில் அதிக அளவில் வளர்கின்றன. முட்கள் நிறைந்த இவை சமூக நலக் காடுகள் கிராம எல்லைகளுக்கிடையேயான காப்புக் காடுகளில் வளர்க்கப்படுகின்றன. அதிக வெப்பத்தன்மை மற்றும் கடினத்தன்மையுடையது. எனவே, விவசாய பெருமக்களின் உழவிற்கான கலப்பை செய்வதற்கும், எரிபொருளாகவும் பயன்படுகிறது.

வறட்சியை கடுமையாக தாங்கி வளரும் தன்மையுடன் அதிக நீடித்த வெள்ளத்தையும் தாங்கி வளருபவை. கிராமப் பகுதியிலுள்ள ஏரிகள், கண்மாய்கள் போன்ற தண்ணீர் தேங்கும் பகுதிகளிலும் தண்ணீரிலேயே வளருபவை. பூக்கும் காலத்தில் நிறைந்த கண்மாய் தண்ணீரில் வெள்ளைநிற கூரிய முட்களுடன் இதன் மஞ்சள் நிற பூக்கள் கண்களின் பார்வைக்கு விருந்தாகும்.

மழைக்காலங்களில் இம்மரங்களில் பறவைகள் கூட்டம் கூட்டமாக கூடுகட்டி இனவிருத்தி செய்கின்றன. பறவைகளுக்கு கண்மாய் தண்ணீரிலுள்ள மீன்கள் உணவாக கிடைப்பதுடன், மரத்தின் கூர்மையான முட்கள் தனது குஞ்சுகளுக்கு

பாதுகாப்பாகவும் உள்ளதால் இம்மரங்களை தேடி பருவங்களில் பறவைகள் தஞ்சமடைகின்றன. கண்மாய் நீரில் வளரும் இவ்வகை கருவை மரங்களை "நீர்க்கருவை" என்றழைக்கின்றனர்.

நெல்லி மரத்தின் இலைகளைப்போன்ற இதன் இலைகளும் சிறிதாக இருக்கும். கரும் பச்சை நிறத்திலுள்ள இந்த இலைகளில், புரதம், மாவு, நார், கொழுப்பு ஆகிய சத்துக்கள் நிறைந்துள்ளன. இதனுடன் உலோக உப்புகளும், தாது உப்புகளும் இதில் அடங்கியுள்ளன. பெண்களின் கால் கொலுசு போன்றதொரு அமைப்பில் காணப்படும் இம்மர காய்கள் மற்றும் இதன் இலைகள் ஆடுகள் மிக விருப்பமாய் உட்கொள்ளும் சிறந்த தீவனமாகும்.

இத்தனை சத்துக்கள் நிறைந்த இம்மர இலைகள், உதிரும்போது ஏரியில் நிறைந்துள்ள தண்ணீரில் கரைந்து, அந்த ஏரியின் நீரால் பாசனம் பெறும் நிலங்களில் உள்ள களர்த்தன்மை முற்றிலும் போக்குகிறது.

கருவேல மரத்தின் ஒவ்வொரு பாகமும் மருந்தாகும். இதன் குச்சிகளால் நீடித்து உழைக்கும் கூடைகளை முடைகிறார்கள், மற்றும் மீன் பிடிப்பதற்கான பொறிகளும் செய்கிறார்கள். இக்குச்சியினால் தினமும் பல்லை துலக்கிவந்தால், ஈறுகளும் (வேர்களும்) பற்களும் உறுதிபடுகின்றன. பற்கள் சம்பந்தப்பட்ட நோய்கள் வராமல் பாதுகாப்பும் கிடைக்கிறது.

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி"

''நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி'' – என்றொரு பழமொழி பன்னெடுங்காலமாக நடைமுறையில் இருக்கிறது.

தொடரும்...

# கும்பகோணம் வேதபாராயணம் 2023

கும்பகோணம் அருகே கோவிந்தபுரத்தில் வேத பாராயண முகாம், கோடி காயத்ரீ ஜப யக்ஞமும் நடைபெற்றது. அதன் விளைவாக கும்பகோணத்தில் பலருக்கும் வேதம் பயிலவேண்டும் என ஆர்வம் ஏற்பட்டது.

குருஜி ஸ்ரீ கைலாச கனபாடிகள் விருப்பத்திற்கு இணங்க வேதபாரதி ஸ்ரீ ராமகிருஷ்ணன் அவர்களின் பெருமுயற்சியால் வேதபாரதி ஸ்ரீ வெங்கட்ராமன் அவர்களுடைய வழிகாட்டுதலால் கும்பகோணம் சங்கரமடத்தில் கடந்த 17.05.2023 பிரதோஷ நன்னாளில் நேரிடையாக வேதம் பயிலும் வேத வகுப்பு தொடங்கப்பட்டது. இதுவரை 18 அன்பர்கள் வேதவகுப்பில் சேர்ந்துள்ளனர்.

இரவு 7.00 மணி முதல் 8.00 மணி வரை தினசரி நடைபெறும் வேத வகுப்பில் இதுவரை புருஷ ஸூக்தம், ஆவஹந்தி ஸூக்தம், துர்கா ஸூக்தம் ஆகிய பாடங்கள் நடந்துள்ளன.

கடந்த 03.06.2023 ஸ்ரீ மஹாபெரியவா ஜயந்தி நாளில் கும்பகோணம் சங்கரமடத்தில் குருஜீ ஸ்ரீமான் கைலாச கனபாடிகள் முன்னிலையில் புருஷ ஸூக்தம், ஆவஹந்தி ஸூக்தம் ஆகியவற்றை வேதம் பயிலும் அன்பர்கள் 10 முறை பாராயணம் செய்தார்கள். குறைந்த நாட்களிலேயே கற்றுக் கொண்டு நடந்த இந்த பாராயணம் அனைவரையும் நெகிழவைத்தது.

99940 89133

99940 89140

SRI SASTHA CATERING


We are Supplying Meals,
Tiffin & Marriage Sear
Variation in Order


28, Senthuran Colony, 2nd Street, Muvarasempet, Madipakkam, Chennai - 91

ஹரி ஓம்
ஸ்ரீ குருப்யோ நம:

# வேதபாரதி

## பெண்மையைப் போற்றுவோம்

## சிந்தனை அரங்கம்

நாள் : 16.07.2023, ஞாயிற்றுக்கிழமை
இடம் : APL குளோபல் பள்ளி, துரைப்பாக்கம்
நேரம் : காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

**13 வயது முதல் கல்லூரி வரை பயிலும் பெண் குழந்தைகள், பெற்றோர்கள் கலந்து கொள்ளலாம்.**

சிறப்பு அழைப்பாளர் :

**டாக்டர். சுதா சேஷையன்**
சென்னை

**நிகழ்ச்சிகள்**

- பாரம்பர்ய விளையாட்டுக்கள் – பரிசுகள்
- தனித்திறன் வெளிப்பாடு – பரிசுகள்
- குறும்படம்
- நெறியார்களின் கருத்துக்கள்

போக்குவரத்து, உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முன்பதிவு அவசியம்

தொடர்புக்கு :

**9443495950 / 99628 50746**

# அட்ட வீரட்டத் தலங்கள்

(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.எட்., பரமக்குடி)

## திருக்கோவிலூர் வீரட்டம்

சென்றமாத தொடர்ச்சி...

மாசி மாதத்தில் பெருவிழா நடைபெறும். விழாவின் ஆறாம் நாளில் மாலையில் அந்தகாசுர சம்ஹாரம் நடைபெறும். அப்பர், சம்பந்தர், வள்ளலார் போற்றிய தலமிது.

இறைவன் : வீரட்டேஸ்வரர்
இறைவி : சிவானந்தவல்லி; பெரியநாயகி
தலமரம் : வில்வம்
தீர்த்தம் : தென் பெண்ணை

## 3. திருவதிகை வீரட்டம்

நடுநாட்டு தலங்கள் இருபத்திரெண்டில் ஏழாவது தலமாக விளங்குவது இத்தலம். எல்லாத் தலங்களிலும் அதிக சிறப்புடையதாக திகழ்வதாலும் அதிகமான் மரபினர் இக்கோயிலை நிறுவியதாலும் இப்பெயர் பெற்றதாகக் கூறுவர்.

முப்புரம் எரித்த வீரநிகழ்ச்சி இத்தலத்தில் நடைபெற்றது. கெடில நதியின் வடகரையில் அந்நதியின் பெயருடனும், வீரட்டானம் என்னும் தொடரும் சேர்ந்து 'அதிகைக்கெடில வீரட்டானம்" எனத் தேவாரம் கூறுகிறது!.

சைவ சித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றான, 'உண்மை விளக்கம்" நூலை அருளிய மணவாசகம் கடன்தாரின் அவதாரத்தலமும் இதுவே. அப்பரின் சகோதரர் திலகவதியார் தங்கியிருந்து திருத்தொண்டு செய்தருளிய தலம். சூலை நோய் தீர திலகவதியார் தந்த திருநீறு அணிந்து, அவருடன் சென்று அதிகைப் பிரானை

வணங்கி, 'கூற்றாயினவாறு'' எனத் தொடங்கும் பதிகம்பாடிச் சூலை நிங்கப்பெற்ற அற்புதத்தலம்.

இத்தலத்தை மிதிக்க அஞ்சிச் சுந்தரர் அருகிலிருந்த சித்த வடமடத்தில் தங்கியதும், இறைவனின் திருவடி தீட்சைபெற்றதும் குணபர வீச்சரம் எழுப்பச்செய்ததும் இத்தலப் பெருமைகள்.

அதிரைய மங்கலம், அதிராஜ மங்கலம், அதிராஜ மங்கலியபுரம் என்னும் பெயர்களும் இத்தலத்திற்குரியன.

**முப்புரம் எரித்தமை :**

வித்யுன்மாலி; தாரகாஷன்; கமலாஷன் என்னும் மூன்று அசுரர்களும் பொன், வெள்ளி இரும்பாலாகிய கோட்டைகளில் இருந்துகொண்டு பறந்து திரிந்து, அக்கோட்டைகளால் பலருக்கும் துன்பம் விளைத்தனர். தேவர்கள் வேண்டுகோளுக்கிணங்கிச் சிவபெருமான் தேவர்களைத் தேராக்கிக் கொண்டு முப்புரத்தை சிரித்தே எரித்தார். அசுரர்கள் வெந்தழிந்த இடம் செந்நிறத்தடனும், அசுரர் மூவரும் இருந்த இடம் வெண்ணிறந்துடன், 'வேதாக் கொல்லை'' எனும் பெயருடனும் இன்றும் இருப்பதை இத்தலத்தில் காணலாம். இவர் மூவரும் சிவபூசையை கைவிடாதிருந்தமையால் அவருள் தாரகாஷன், கமலாஷன் இருவரையும் துவார பாலகர்களாகவும், வித்யுன்மாலியை குடமுழா முழக்குபவராகவும் பதம் பெற்று உய்ந்தனர்.

இத்தகைய வீரவிளையாட்டு நடந்த இத்தலம் வீரட்டானம் எனப்பெற்றது.

தொடரும்...


# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

Communication Address : S. SREEDHAR, 32, Ground Floor, Raja Nagar, 1st Main Road, Neelangarai, Chennai - 600 115.

Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071

Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org

## ஸ்ரீ காஞ்சி
## மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்



*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

*என்பது சாஸ்த்ர வசனம்*

*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**


CUB கீ செயின் டெபிட் கார்டினை பரிந்துரைத்து ஊக்க வெகுமதியை பெறுங்கள்
₹150* வரை
எவ்வாறு செயல்படுகிறது
STEP 1
நெட்பேங்கிங் மற்றும் மொபைல் பேங்கிங் வாயிலாக கீ செயின் டெபிட் கார்ட் வேண்டி விண்ணப்பிக்கவும்
STEP 2
விண்ணப்பிக்கும் போது பரிந்துரைத்தவரின் மொபைல் எண்ணை பதிவு செய்யவும்
STEP 3
கீ செயின் டெபிட் கார்டு டெலிவரி செய்யும் பொது பரிந்துரைத்தவர் மற்றும் பரிந்துரைக்கபட்டவருக்கு ரூ.50
STEP 4
பரிந்துரைக்கபட்டவருக்கு மேலும் ரூ.50 (ஆக்டிவேஷன் செய்து முதல் பரிவர்த்தனை செய்த பின்)
CUB நெட் பேங்கிங், மொபைல் பேங்கிங் மற்றும் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கவும்
Scan QR Code to Apply
*T&C Apply
RuPay ON-THE-GO
If you are not an existing CUB Customer, Now you can open Savings & Current account instantly through VIDEO KYC
Simply give a missed call to +91 88866 10805 (or) Scan the QR Code
சிட்டி யூனியன் பேங்க்
CUB TRUST AND EXCELLENCE SINCE 1904
www.cityunionbank.com
ராசியான பேங்க், ஈஸியான பேங்க்
Internet/Mobile Banking | Sovereign Gold Bonds | Chat Bot | Cardless Withdrawal | Fastag | Spend Analyzer | Debit and Credit Card | Prepaid/Travel Card | PoS | Social Media Banking | UPI QR Code for Merchants | Online Mutual Fund | Video KYC Online ASBA | WhatsApp Banking Insta Loan | Wallet | Set Card Limit | Green Pin
For Assistance, call our 24x7 Customer Care : 044 7122 5000
044-71225000 cityunionbankltd cubltd cityunionbankltd cubltd

RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/21-23
Date of Publication First Week of Every Month
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/21-23
Posted at Patrika Chennai, Egmore.
Posted between 1 - 7th July 2023




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி

சூர்யா ஜுவல்லர்ஸ்® A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.